ධීවර හා ජලජ සම්පත් දෙපාර්තමේන්තුව

கடற்றொழில், நீரியல் வளத்துறை திணைக்களம்

DEPARTMENT OF FISHERIES & AQUATIC RESOURCES



# කාර්යය සාධන වාර්තාව

# செயலாற்றறிக்கை

# Performance Report

# 2018

# பொருளடக்கம்


| | பக்க இல |
|---|---|
| முன்னுரை | ii |
| 1. கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம் | 01-08 |
| 2. கடற்றொழில் முகாமைத்துவ பிரிவு | 09-13 |
| 3. கடற்றொழில் அபிவிருத்திப் பிரிவு | 14-24 |
| 4. கடற்றொழில் உற்பத்திகள் தரக் கட்டுப்பாட்டு பிரிவு | 25-27 |
| 5. கடற்றொழில் நடவடிக்கைப் பிரிவு | 28-34 |
| 6. பயிற்சி மற்றும் ஆய்வுப் பிரிவு | 35-40 |
| 7. தகவல் தொழில்நுட்பப் பிரிவு | 41-46 |
| 8. நிர்வாகப் பிரிவு | 47-59 |
| 9. நிதிப் பிரிவு | 60-63 |
| 10. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | 64-67 |

# முன்னுரை

கடற்றொழில் படகுளினதும், கடற்றொழில் உபகரணங்களினதும் முறையான முகாமைத்துவத்தின் ஊடாக வரையறைக்குட்பட்டதான கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்களை எமது வருங்கால சந்ததியினரின் பொருட்டு பாதுகாப்பதே, இக் கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் முக்கிய கடமையாகும்.

பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், ஆழ்கடலில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் படகுகளை படகு கண்காணிக்கும் முறைமை (VMS) தொகுதி ஊடாக கண்காணித்தல், மீன்பிடித் துறைமுகங்களில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளின் மூலம் மீன்பிடி நடவடிக்கைகளைச் சான்றுபடுத்தல் ஆகியவற்றுக் கூடாக மீனவர்களை சர்வதேச சட்டதிட்டங்கள் மற்றும் ஒப்பந்தங்களின் தேவைப்பாடுகளுக்கு அமைவானதும், பொறுப்பானதுமான கடற்றொழில் கைத்தொழிலை மேற்கொள்ள செய்வதற்கான செயற்பாடுகள் திணைக்களத்தினால் இவ்வாண்டில் முன்னெடுக்கப்பட்டது.

சர்வதேச தரங்களுக்கு அமைவாக மீன் உற்பத்திகளின் தரம் மற்றும் பாதுகாப்பானது சான்றுபடுத்தப்படுவதன் மூலம் 2018ம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு மட்டுமன்றி அமெரிக்கா, சீனா, ரஷ்யா, கனடா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் மீன் உற்பத்திகளின் ஏற்றுமதியை விரிவுபடுத்த முடிந்தமை இத் திணைக்களத்திற்கு கிடைத்த வெற்றியேயாகும்.

திணைக்களத்தோடு தொடர்புபட்ட பயனாளர்களிற்கு துரிதமானதும் வினைத்திறனானதுமான சேவையை வழங்கும் பொருட்டு உரிமம் மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்கலானது இணையமயமாக்கப்பட்டுள்ளது.மேலும் கள மட்டத்திலான தரவு சேகரித்தலும் சகல அலுவலர்களதும் நிர்வாக மற்றும் தொழில் நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்தலும் இணையமயமாக்கப்பட எதிர்பார்க்கப்படுகிறது. திணைக்களத்தால் வழங்கப்படும் சேவைகள் மற்றும் சேவை வழங்குநர்களின் தகவல்கள் ஆகியன பதிவேற்றப்பட்டு திணைக்களத்தின் இணையத்தளமானது நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது.

2019 இல் இணையமயமாக்கலானது பூர்த்தி செய்யப்படவுள்ளது. இதற்குத் தேவையான பயிற்சியானது அலுவலர்களுக்கு 2018 இல் வழங்கப்பட்டுள்ளது.

கினிகே பிரசன்ன ஜனக குமார
பணிப்பாளர் நாயகம்

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்
புதிய செயலகம்
கொழும்பு – 10
27.02.2019

# கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம்

## 1.1 நோக்கம்

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சர்வதேச சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு அமைவாக கடற்றொழில் வளங்களை முகாமைத்துவம் செய்வதன் ஊடாக இலங்கையின் பொருளாதாரத்துக்கு உரிய பங்களிப்பை வழங்கும் வகையில் கடற்றொழில் கைத்தொழிலை தொடர்ந்தும் அபிவிருத்தி செய்தல்.

## 1.2 குறிக்கோள்கள்

- தேசிய, சர்வதேச சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு அமைவாக கடற்றொழில் நடவடிக்கைகளை முகாமைத்துவம செய்தல், ஒழுங்குபடுத்தல், பாதுகாத்தல் மற்றும் தொடர்ந்தும் அபிவிருத்தி செய்தல்.

- தேசிய மற்றும் சர்வதேச முதலீடுகளை ஊக்குவித்தல்.

- தேசிய மற்றும் சர்வதேச கடலில் மீன் வளங்களை அறுவடை செய்வதற்குரிய நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தல்.

- மீனவ சமூகத்தின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்தல்.

- சர்வதேச பிரமாணங்களுக்கு அமைவாக ஏற்றுமதிக்கான மீன் உற்பத்தியின் தரம் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்.

- மீன் அறுவடையின் பின் ஏற்படும் வீண் விரயத்தைக் குறைத்தல் மற்றும் தேசிய மீன் உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்தல்.

## 1.3 உபாய வழிகள்

- தற்கால நடைமுறைகள், சர்வதேச சட்டம் மற்றும் பிரமாணங்களுக்கு அமைவாக 1996ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டம் மற்றும் 1979ஆம் ஆண்டின் 59ஆம் இலக்க கடற்றொழில் (வெளி நாட்டு மீன்பிடிப் படகு) சட்டம் ஆகியவற்றை அறிமுகப்படுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.

- கடற்றொழில் பிரிவின் அபிவிருத்தியின் பொருட்டு தேசிய மற்றும் சர்வதேச வர்த்தக சமூகத்தின் முதலீட்டை ஊக்குவிப்பதற்கு ஏதுவான சூழலை உருவாக்கல்.

- கடற்றொழில் பிரிவின் அபிவிருத்திக்கு நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் பொருட்டு அது சார்பான நிறுவனங்களுடன் ஆக்கபூர்வமான கூட்டுமுயற்சியை ஏற்படுத்தல்.

- தேசிய மற்றும் வெளிநாட்டு நிதியத்தைப் பயன்படுத்தி நடைமுறைப்படுத்தும் பல்வேறு கடற்றொழில் துறை அபிவிருத்தி செயற்றிட்டங்கள், சமூக அபிவிருத்தி

வேலைத் திட்டங்கள் மற்றும் விஞ்ஞான ரீதியான கற்கைகள் மற்றும் ஆய்வுகளின் முடிவுகள் என்பவற்றை மீனவர்களுக்கு வழங்கக் கூடியதான நவீன தகவல் தொழில்நுட்பத்தைப் அடிப்படையாகக் கொண்ட விரிவாக்கல் சேவையினை உருவாக்கல்.

- கடற்றொழில் அபிவிருத்தி வேலைத் திட்டம், விரிவாக்கல் மற்றும் வள முகாமைத்துவத்துக்குகான மீனவ சமூகத்தின் பங்களிப்புக்கு முன்னுரிமை வழங்குதல் மற்றும் அதன் பொருட்டு அரச, அரச சார்பற்ற மற்றும் சமூக அமைப்புகளின் பங்களிப்பைப் பெறல்.

- மீன் அறுவடையின் பின் ஏற்படும் வீண் விரயத்தைக் குறைப்பதற்கும் ஏற்றுமதி மற்றும் தேசிய மீன் உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்துவதற்கும் தேவையான கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்கும் பயிற்சிகளை வழங்குவதற்கும் தேவையான உபாயங்களை வலுப்படுத்தல்.

- மீனவ குடும்பங்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்தும் பொருட்டு மீனவர்கள் மற்றும் மீனவப் பெண்களின் பூரண பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்குரிய சலுகைகளை வழங்குதல்.

## 1.4 செயற்பாடுகள்

- கடற்றொழில் நடவடிக்கை ஒழுங்குவிதிகள், கடற்றொழில் முகாமைத்துவ ஒழுங்குவிதிகள்,நீர்வளர்ப்பு முகாமைத்துவ ஒழுங்குவிதிகள் என்பவற்றை உருவாக்கல், விதித்தல், புதுப்பித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.

- கடற்றொழில் படகுகள் பதிவு செய்தல், மீன்பிடி நடவடிக்கை அனுமதிப் பத்திரம் வழங்குதல்.

- கடற்றொழில் படகுகள் அடகு வைப்பது சம்பந்தமான நடவடிக்கை

- உயிர் மீன் ஏற்றுமதிக்கான அனுமதிப் பத்திரம் வழங்குதல்.

- வெளிநாட்டு படகுகளுக்கு மீன்களைத் தரையிறக்குவதற்கான அனுமதிப் பத்திரம் வழங்கல்.

- கடற்றொழில் முகாமைத்துவம் சம்பந்தமான புரிதலை மேம்படுத்தல்.

- மூலப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கான கடன் வசதிகளை ஏற்படுத்தல்

- படகு உற்பத்தியாளர்கள், மீன்பிடி உபகரணங்கள் உற்பத்தியாளர்கள், மற்றும் விற்பனையாளர்கள் , படகு இயந்திர முகவர்களைப் பதிவு செய்தல்.

- படகு இயந்திர மற்றும் மீன்பிடி உபகரணங்களின் விலைமனு கோரி அதனை அனுமதி செய்தல்.

- மீனவ கூட்டுறவு சங்கங்களின் செயற்றிறனை மேம்படுத்தும பொருட்டு வழிகாட்டல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

- மீனவ கூட்டுறவு அபிவிருத்தி செயற்றிட்டம் தயாரித்தல் மற்றும் மீனவ இதிவர வங்கி ஏற்படுத்தல்.

- மீனவ சமூகத்தினை விழிப்பூட்டல்.

- மீன்பிடிக் கைத்தொழிலுக்குத் தேவையான தரவுகள் சேகரித்தல்.

- வெளிநாடுகளில் கைது செய்யப்பட்ட மற்றும் கடலில் அநாதரவான கடற்றொழிலாளர்களை மீள இலங்கைக்கு அழைத்து வருதல்.

- மீன் பொருட்கள் உற்பத்தித் தொழிற்சாலைகளைப் பதிவு செய்தல், ஏற்றுமதி செய்யப்படும் மீன் உற்பத்திகளைப் பரிசோதித்தல் மற்றும் ஏற்றுமதி செய்வதற்கான சுகாதாரச் சான்றிதழை வழங்கல்.

- உள்நாட்டு மீன் விற்பனை நிலையங்களை மேம்படுத்தல்.

## 1.5 அமைப்பின் கட்டமைப்பு

கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சின் கீழ் செயற்படும் கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம் பணிப்பாளர் நாயகம் ஒருவரினால் நிர்வகிக்கப்படுகின்றது. இந்த திணைக்களத்தின் நடவடிக்கைகளை வினைத்திறனுடன் முன்னெடுப்பதற்காக தலைமைக்காரியாலயத்தின் நடவடிக்கைகள் பின்வரும் 9 பிரிவுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

1. கடற்றொழில் முகாமைத்துவப் பிரிவு.
2. கடற்றொழில் அபிவிருத்திப் பிரிவு.
3. கடற்றொழில் உற்பத்தி தரக் கட்டுப்பாட்டுப் பிரிவு.
4. கடற்றொழில் நடவடிக்கைப் பிரிவு
5. ஆய்வு மற்றும் பயிற்சிப் பிரிவு
6. தகவல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவு
7. நிர்வாகப் பிரிவு.
8. நிதிப் பிரிவு.
9. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

இந்த பிரிவுகளின் நடவடிக்கைகள் பணிப்பாளர்கள் ஐந்து பேர் மூலமும் மற்றும் பிரதம கணக்காய்வாளர் மூலமும் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. கரையோர மாவட்டங்களை உள்ளடக்கியதாக 15 மாவட்ட உதவிப் பணிப்பாளர் அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளன. அத்துடன், ஒவ்வொரு மாவட்டத்தின் நடவடிக்கையும் அந்தந்த மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளரின் கீழ் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. மாவட்டத்துக்குள் கரையோர பிரதேசங்களை உள்ளடக்கியதாக கடற்றொழில் பரிசோதகர் பிரிவுகள் 133உம் அமைக்கப்பட்டுள்ளன. இந்த சகல பிரிவுகளுக்கும் கடற்றொழில் அலுவலகம் 1 வீதம் நிறுவப்பட்டுள்ளது. கடற்றொழில் பரிசோதகர், கடற்றொழில் சமூக அபிவிருத்தி உதவியாளர்கள், கடற்றொழில் வள முகாமைத்துவ உதவியாளர்கள் போன்ற அலுவலர்களினால் கடற்றொழில் பரிசோதகர் பிரிவுக்குள் சகல கடற்றொழில் நடவடிக்கைகளும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அவ்வாறே கடற்றொழில் துறைமுகங்கள்

சார்ந்ததாக தேடுதல், கண்காணிப்பு நடவடிக்கை நிலையங்கள் 20உம் நிறுவப்பட்டுள்ளன. அத்துடன் வானொலி அலுவலர்கள் பகலிலும் இரவிலும் சேவை செய்து வருகின்றனர்.

இதற்கு மேலதிகமாக, 2015ஆம் ஆண்டின் நடுப் பகுதியிலிருந்து கடற்றொழில் துறைமுகங்களில் அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளன. அத்துடன் கடற்றொழில் திணைக்களத்தின் அலுவலர்களினால் பகல் மற்றும் இரவு துறைமுகத்திலிருந்து புறப்படும் படகுகள், பரிசோதனை செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டு பின்னே புறப்பாட்டிற்கு அனுமதி வழங்கல், துறைமுகத்துக்குள் வரும் கடற்றொழில் படகுகளின் பயணத்துக்குரிய தரவுக் குறிப்பேடு பெற்றுக் கொள்ளல், அதற்கமைய மீன் அறுவடையைப் பரிசோதித்தல், ஏற்றுமதிக்கான மீன் தொகை தொடர்பில் அறிக்கை தயாரித்து கொள்வனவாளர்களுக்கு வழங்குதல், சட்ட விரோத அறிக்கையிடப்படாத மற்றும் முறையற்ற கடற்றொழில் நடவடிக்கைகள் நடைபெற்றிருப்பின் அது தொடர்பில் வாக்குமூலம் பெற்றுக் கொள்ளல் மற்றும் தரவு குறிப்பேடு (லொக் புக்) பெற்றுக் கொள்ளப்படும் வாக்குமூலம் என்பவற்றை தலைமை அலுவலகத்துக்கு தொலைநகல் மற்றும் மின்னஞ்சல் மூலம் அனுப்புதல் மற்றும் மாற்றுக் கண்காணிப்பு அறிக்கை தயாரித்தல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

## 1.6 மாவட்ட ரீதியான கடல் மீன்பிடி

| தொ. இல. | மாவட்டம் | 2018 ஆம் ஆண்டுக்கான இலக்கு | 2018 ஆம் ஆண்டில் அடைவு |
|---|---|---|---|
| | | மீன் உற்பத்தி மெற்றிக் தொன் | |
| 01 | கொழும்பு | 7,100 | 4,287 |
| 02 | களுத்துறை | 35,092 | 40,849 |
| 03 | காலி | 56,137 | 53,155 |
| 04 | மாத்தறை | 51,241 | 9,802 |
| 05 | தங்காலை | 60,000 | 61,907 |
| 06 | கல்முனை | 27,247 | 18,109 |
| 07 | மட்டக்களப்பு | 24,420 | 18,532 |
| 08 | திருகோணமலை | 18,825 | 36,717 |
| 09 | முல்லைத்தீவு | 15,130 | 3,066 |
| 10 | கிளிநொச்சி | 9,481 | 11,953 |
| 11 | யாழ்ப்பாணம் | 65,250 | 40,396 |
| 12 | மன்னார் | 38,125 | 23,045 |
| 13 | புத்தளம் | 35,954 | 29,359 |
| 14 | மகாவெவ | 31,500 | 29,764 |
| 15 | நீர்கொழும்பு | 31,390 | 29,200 |
| **மொத்தம்** | | **506,892** | **430,141** |

## 1.7 கடற்றொழிலில் ஈடுபடும் மீன்பிடிப் படகுகள் மாவட்ட ரீதியாக 2018

| மாவட்டம் | | உள்ளிணை இயந்திர படகு | | | வெளியிணை இயந்திர படகு | | இயந்திரமற்ற படகு | கரைவலை படகு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | IMUL >50 அடி | IDAY <50 அடி | 1 DAY | OFRP | MTRB | NTRB | NBSB |
| 01 | கொழும்பு | 28 | 28 | 16 | 394 | 01 | 307 | 24 |
| 02 | களுத்துறை | 37 | 381 | 01 | 437 | - | 343 | 42 |
| 03 | காலி | - | 709 | 16 | 369 | 211 | 245 | 43 |
| 04 | மாத்தறை | - | 1,210 | 70 | 807 | 233 | 661 | 07 |
| 05 | தங்காலை | 01 | 528 | 73 | 829 | 171 | 627 | 83 |
| 06 | கல்முனை | - | 145 | 60 | 730 | 201 | 812 | 174 |
| 07 | மட்டக்களப்பு | - | 371 | 11 | 1,418 | 13 | 3,750 | 145 |
| 08 | திருகோணமலை | - | 132 | 13 | 2,974 | 24 | 1,616 | 191 |
| 09 | முல்லைத்தீவு | - | - | - | 994 | 10 | 137 | 24 |
| 10 | கிளிநொச்சி | - | - | - | 711 | 78 | 215 | - |
| 11 | யாழ்ப்பாணம் | - | 104 | 426 | 4,234 | 653 | 2,036 | 212 |
| 12 | மன்னார் | - | 41 | 208 | 3,080 | 506 | 717 | 12 |
| 13 | புத்தளம் | 01 | 50 | - | 2,611 | 205 | 1,329 | 196 |
| 14 | சிலாபம் | 27 | 504 | - | 1,776 | 08 | 3,768 | 14 |
| 15 | நீர்கொழும்பு | - | 305 | 09 | 1,273 | - | 1,142 | 35 |
| **மொத்தம்** | | **94** | **4,508** | **903** | **22,637** | **2,314** | **17,705** | **1,202** |

## 1.8 மாவட்ட ரீதியான மீனவ சனத்தொகை 2018

| தொ. இல. | மாவட்டம் | மீனவ குடும்பங்களின் எண்ணிக்கை | மீனவர்களின் எண்ணிக்கை | சனத்தொகை |
|---|---|---|---|---|
| 01 | கொழும்பு | 1663 | 1898 | 6759 |
| 02 | களுத்துறை | 3474 | 4254 | 13306 |
| 03 | காலி | 7337 | 11423 | 32681 |
| 04 | மாத்தறை | 9253 | 13917 | 36722 |
| 05 | தங்காலை | 8291 | 9525 | 28240 |
| 06 | கல்முனை | 12435 | 14887 | 66791 |
| 07 | மட்டக்களப்பு | 23726 | 26472 | 84762 |
| 08 | திருகோணமலை | 23271 | 27622 | 71450 |
| 09 | முல்லைத்தீவு | 2908 | 5388 | 12217 |
| 10 | கிளிநொச்சி | 4113 | 3784 | 16801 |

1.9 **2018.12.31ஆந் திகதியின்போது திணைக்களத்திற்குஅனுமதிக்கப்பட்ட சேவையாளர்கள் எண்ணிக்கை மற்றும் நிலவும் வெற்றிடம்**

| புதவி | | அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள் | பணியில் உள்ளோர் | நிலவும் வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| 1. | பணிப்பாளர் நாயகம் (இல.நிர்.சே. விசேட தரம்) | 01 | 01 | - |
| 2. | மேலதிக பணிப்பாளர் நாயகம் (இல.நிர்.சே. விசேட தரம்) | 01 | - | 01 |
| 3. | பணிப்பாளர் (நிர்வாகம்) (இல.நிர்.சே.I) | 01 | 01 | - |
| 4. | பணிப்பாளர் (முகாமைத்துவம்) திணை. தரம் I | 01 | - | 01 |
| 5. | பணிப்பாளர் (அபிவிருத்தி) திணை. தரம் I | 01 | - | 01 |
| 6. | பணிப்பாளர் (தரக் கட்டுப்பாடு) திணை. தரம் I | 01 | - | 01 |
| 7. | பணிப்பாளர் (நடவடிக்கை) திணை. தரம் I | 01 | - | 01 |
| 8. | பணிப்பாளர் (ஆய்வு மற்றும் பயிற்சி) திணை. தரம் I | 01 | - | 01 |
| 9. | பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்) திணை. தரம் I | 01 | - | 01 |
| 10. | பிரதம உள்ளக கணக்காய்வாளர்(இல.கணக். சேவை I) | 01 | 01 | - |
| 11. | பிரதான கணக்காளர் (இல. கணக்காளர் சேவை I) | 01 | 01 | - |
| 12. | கணக்காளர்-விநியோகம்(இல.கணக்காளர் சேவை தரம் I) | 01 | 01 | - |
| 13. | பிரதி பணிப்பாளர்/உதவி பணிப்பாளர் (நிர்வாகம்) (இல.நிர்.சே.II/III) | 01 | 01 | - |
| 14. | பிரதி பணிப்பாளர்/உதவி பணிப்பாளர் (தாபனம்) (இல.நிர்.சே.II/III) | 01 | - | 01 |
| 15. | பிரதி/ உதவி பணிப்பாளர் (உயிரியலாளர்) (திணை. தரம் II/III) | 01 | 01 | - |
| 16. | பிரதி/ உதவி பணிப்பாளர் (சமூக பொருளியல்) (திணை. தரம் II/III) | 01 | 01 | - |
| 17. | பிரதி/ உதவி பணிப்பாளர் (தரக் கட்டுப்பாடு) (திணை. தரம் II/III) | 02 | 02 | |
| 18. | பிரதி/ உதவி பணிப்பாளர் (தரக் கட்டுப்பாடு - இறக்குமதி மற்றும் ஏற்றுமதி) (திணை. தரம் II/III) | 01 | - | 01 |
| 19. | பிரதி/ உதவி பணிப்பாளர்( கடற். முகாமைத்துவம்) (திணை.தரம் II/III) | 01 | | |

| | புதவி | அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள் | பணியில் உள்ளோர | நிலவும் வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| 20. | பிரதி /உதவி பணிப்பாளர் (கடற்.தொழில்நுட்பம்) (திணை. தரம் II/III) | 01 | 24 | - |
| 21. | பிரதி/உதவி பணிப்பாளர் (வெளிநாட்டலுவல்கள்) (திணை. தரம் II/III) | 01 | | |
| 22. | பிரதி/ உதவி பணிப்பாளர் (அபிவிருத்தி) (திணை. தரம் II/III) | 01 | | |
| 23. | பிரதி/ உதவி பணிப்பாளர் (கடனீரேரிகள் முகாமைத்துவம்) (திணை. தரம் II/III) | 01 | | |
| 24. | (பிரதி/ உதவி பணிப்பாளர் (நடவடிக்கை – ஆழ்கடல்) (திணை. தரம் II/III) | 01 | | |
| 25. | பிரதி/ உதவி பணிப்பாளர் (நடவடிக்கை – கடல்) (திணை. தரம் II/III) | 01 | | |
| 26. | பிரதி/ உதவி பணிப்பாளர் (பயிற்சி) (திணை. தரம் II/III) | 01 | | |
| 27. | பிரதி/ உதவி பணிப்பாளர் (ஆய்வு) (திணை. தரம் II/III) | 01 | | |
| 28. | பிரதி/ உதவி பணிப்பாளர் (மாவட்டம்) (திணை. தரம் II/III) | 15 | | |
| 29. | பிரதி/ உதவி பணிப்பாளர் (படகு கண்காணிப்பு) (திணை. தரம் II/III) | 01 | 01 | - |
| 30. | பிரதி/ உதவி பணிப்பாளர் (தேடுதல்) (திணை. தரம் II/III) | 01 | - | 01 |
| 31. | பிரதி/ உதவி பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்) (இல.த.தொ.சேவை தரம் II/III) | 01 | - | 01 |
| 32. | சட்ட அலுவலர் (திணை. தரம் I/II) | 01 | 01 | - |
| 33. | கடற் பொறியியலாளர் (திணை. தரம் I/II/III) | 01 | - | 01 |
| 34. | கட்டடப் பொறியியலாளர் (இல. பொறி. சே. I/II/III) | 01 | 01 | - |
| 35. | கணக்காளர் (கொடுப்பனவுகள்)- (இல.கண.சே.II/III) | 01 | 01 | - |
| 36. | கணக்காளர் (வரி /சம்பளம் /முற்கொடுப்பனவுக் கணக்குகள்) (இல.கண.சே.II/III) | 01 | - | 01 |
| 37. | நிர்வாக அலுவலர் (ஒருங்கிணைந்த சேவை) | 01 | 01 | - |
| 38. | கடல் ஆய்வாளர் (திணைக்கள சேவை) | 02 | - | 02 |
| 39. | மொழி பெயர்ப்பாளர் (ஒருங்கிணைந்த சேவை) | 02 | 01 | 01 |
| 40. | தகவல் மற்றும் தொடர்பாடல் அலுவலர் (இல.த.தொ.சேவை) | 03 | 03 | - |
| 41. | வேலைத்திட்ட முகாமையாளர் (திணைக்கள சேவை) | 01 | 01 | - |
| 42. | தரக் கட்டுப்பாட்டு அலுவலர் (ஒருங்கிணைந்த சேவை) | 20 | 06 | 14 |
| 43. | கடற்றொழில் வள முகாமைத்துவ உதவியாளர் (திணை.) | 03 | 03 | - |

| | புதவி | அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள் | பணியில் உள்ளோர | நிலவும் வெற்றிடங்கள |
|---|---|---|---|---|
| 44. | அபிவிருத்தி உத்தியோகத்தர் (ஒருங்கிணைந்த) | 212 | 226 | 14 ⋆ |
| 45. | சட்ட உதவியாளர் (திணைக்களம்) | 02 | - | 02 |
| 46. | வேலைத் திட்ட உதவியாளர் (திணைக்களம்) | 01 | 01 | - |
| 47. | கடற்றொழில் அலுவலர் (திணைக்களம்) | 225 | 88 | 137 |
| 48. | வரைவாளர் (இல.தொ.சேவை) | 01 | - | 01 |
| 49. | கடற் பொறியியல் உதவியாளர் (இல.தொ.சே.) | 15 | 11 | 04 |
| 50. | நடவடிக்கை அலுவலர் (இல.தொ.சே.) | 12 | 03 | 09 |
| 51. | தொழில்நுட்ப அலுவலர் (பொது) - (இல.தொ.சே.) | 02 | 01 | 01 |
| 52. | தொழில்நுட்ப அலுவலர் (கணனி) - (இல.தொ.சே.) | 01 | - | 01 |
| 53. | பொது முகாமைத்துவ உதவியாளர் (ஒருங்கிணை) | 143 | 138 | 05 |
| 54. | போக்குவரத்து அலுவலர் (திணைக்களம்) | 01 | - | - |
| 55. | கடற். சமூக அபிவிருத்தி அலுவலர் (திணை) | 24 | 12 | 12 |
| 56. | கடற். அனுமதிப்பத்திர அலுவலர் (திணைக்களம்) | 01 | 01 | - |
| 57. | கடற்றொழில் பரிசோதகர் (திணைக்களம்) | 42 | 42 | - |
| 58. | கடற் பொறியியல் உதவியாளர் (திணைக்களம்) | 01 | 01 | - |
| 59. | பிரதான வானொலி அலுவலர் (திணைக்களம்) | 01 | 01 | - |
| 60. | சிரேஷ்ட வானொலி அலுவலர் (திணைக்களம்) | 05 | 03 | 02 |
| 61. | கனிஷ்ட வானொலி அலுவலர் (திணைக்களம்) | 62 | 45 | 17 |
| 62. | தகவற் தொலைத்தொடர்பு தொ.நுட்ப உதவியாளர் (இல.த.தொ.சேவை) | 02 | 02 | - |
| 63. | சாரதி சேவை (ஒருங்கிணைந்த சேவை) | 25 | 19 | 06 |
| 64. | அலுவலக பணியாளர் சேவை (ஒருங்கி. சேவை) | 75 | 55 | 20 |
| 65. | பேருந்து நடத்துநர் (திணைக்களம்) | 01 | 01 | - |
| 66. | தடுப்பு சார்ஜன்ட் (திணைக்களம்) | 02 | 01 | 01 |
| 67. | தடுப்புக் காவலர் (திணைக்களம்) | 03 | 03 | - |
| 68. | விடுதிக் காப்பாளர் | 01 | 01 | - |
| | | **943** | **708** | **235** |

❖ 137 கடற்றொழில் அலுவலர் பதவிகள் வெற்றிடங்களாக உள்ளமையால் 14 அபிவிருத்தி அலுவலர்கள் மேலதிக கடமைகள் புரிகின்றனர்.

# 2. கடற்றொழில் முகாமைத்துவ பிரிவு

## 2.1 நோக்கம்

இலங்கையில் கடற்றொழில் கைத்தொழிலை உறுதியாக முன்னெடுத்துச் செல்வதற்கு, இலங்கையின் நீர்ப் பரப்பில் மற்றும் ஆழ் கடலில் கடற்றொழில் வளங்களின் முகாமைத்துவத்தை முறையாக முன்னெடுத்தல், பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது இந்த பிரிவின் நோக்கமாகும்.

## 2.2 பொறுப்புகள்

இந்த நோக்கத்தை நிறைவு செயவதற்கு கீழ் குறிப்பிடப்படும் விடயங்களை முன்னெடுத்தல் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

- கடற்றொழில் சட்டங்களைத் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.
- கடற்றொழில் படகுகள் பதிவு செய்தல்.
- கடற்றொழில் படகு உரிமை மாற்றம் மற்றும் அடகு சம்பந்தமான நடவடிக்கை.
- கடற்றொழில் நடவடிக்கை அனுமதிப் பத்திரம் வழங்கல்.
- கடற்றொழில் படகோட்டி அனுமதிப் பத்திரம் வழங்கல்.
- வெளிநாட்டு கடற்றொழில் படகின் மூலம் துறைமுக சேவை வழங்கல். மீன் தரை இறக்கல் மற்றும் மீள் ஏற்றுமதிக்கு அனுமதிப் பத்திரம் வழங்கல்.
- அலங்கார மீன் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கு அனுமதிப் பத்திரம் வழங்கல்.
- கடலட்டை மற்றும் சிங்கி இறால் பிடித்தல், தம் வசம் வைத்திருத்தல், ஏற்றி இறக்கல் மற்றும் ஏற்றுமதிக்கு அனுமதிப் பத்திரம் வழங்கள்.
- சிப்பிகள் மற்றும் சுறா செட்டை ஏற்றி இறக்குவதற்கு மற்றும் ஏற்றுமதி செய்வதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கல்.
- கரைவலைத் துறைமுகம் மற்றும் உரிமையாளர்களைப் பதிவு செய்தல் மற்றும் அனுமதிப் பத்திரம் வழங்கல்.
- மீன் மற்றும் மீன் சார்ந்த உற்பத்திகளுக்கு ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் மீள் ஏற்றுமதிக்கு அனுமதிப் பத்திரம் வழங்கல்.
- மீனவர்களுக்கு அடையாள அட்டை வழங்கல்.
- கடலில் அனாதரவாகச் சென்று வெளிநாடுகளுக்கு கைது செய்யப்படும் மீனவர்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல்.
- கடற்றொழில் முகாமைத்துவ பிரதேசம், கடற்றொழில் குழு மற்றும் அதிகார சபைகளை நிறுவி அதற்கு அந்த நிறுவனத்தின் மூலம் கடற்றொழில் முகாமைத்துவ அபிவிருத்தி திட்டம் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.
- கடற்றொழில் கைத்தொழில் மற்றும் மீனவ பிரசைகள் சம்பந்தமான தரவுகள் சேகரித்தல் மற்றும் மீளாய்வு செய்தல்.
- கடற்றொழில் தகராறுகளைத் தீர்த்து வைத்தல்.

## 2.3 2018இன் செயலாற்றுகை

2.3.1 சட்ட விரோத கடற்றொழில் நடவடிக்கைகளுக்கு எதிராக நாளாந்த வழிமுறை மற்றும் 1996ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் ஒழுங்குவிதிகளின் கீழ் அமுலாக்கப்படும் கட்டளைச் சட்டம், ஒழுங்குவிதிகள் மற்றும் நியதிகளின் விபரம்.

| தொ இல | சட்டரீதியான நடவடிக்கை | முன்னேற்றம் |
|---|---|---|
| 1 | 1996ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் ஒழுங்குவிதிகளின் விதிமுறைகளுக்கு அமைவாக சட்டத்தை மீறியமைக்கான சட்ட ரீதியான வழிமுறை | 180 வழக்குகள் தொடரப்பட்டுள்ளது. |
| 2 | 1996ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் ஒழுங்குவிதிகளை திருத்தம் செய்தல் (அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர்களின் அதிகாரத்துக்கு பாதிப்பு ஏற்படுத்தல்) | கௌரவ நீதிபதி அவர்களின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள் ளது. |
| 3 | 2018ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க கடற்றொழில் (வெளிநாட்டு கடற்றொழில் படகுகளை முறைப்படுத்தல்) ஒழுங்குவிதிகள் | பாராளுமன்றத்தின் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது . |
| 4 | 2016ஆம் ஆண்டின் இலங்கை நீர்ப் பரப்புக்குள் மீன் மற்றும் நீரியல் வளங்களைப் பாதுகாக்கும் ஒழுங்குவிதிகள்.<br>(2008/30 ஆம் இலக்க 2017.03.03 ஆந் தேதிய அதி விஷேட வர்த்தமானி பத்திரிகை) | பாராளுமன்றத்தின் அனுமதி பெற்றுக் கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள் ளது. |
| 5 | 2018ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க கடற்றொழில் நடவடிக்கைகளில் கூருள்ள ஈட்டிகளைப் பயன்படுத்துவதைத் தடுக்கும் ஒழுங்குவிதிகள்.<br>2008/31 ஆம் இலக்க 2017.03.03 ஆந் தேதிய அதி விஷேட வர்த்தமானி பத்திரிகை) | பாராளுமன்றத்தின் அனுமதி பெற்றுக் கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள் ளது. |
| 6 | 2017ஆம் ஆண்டின் மீன் இனத்தை பிடிப்பதை தடை செய்யும் ஒழுங்குவிதிகள்.<br>(2004/4 ஆம் இலக்க 2017.04.11 ஆந் தேதிய அதி விஷேட வர்த்தமானி பத்திரிகை) | பாராளுமன்றத்தின் அனுமதி பெற்றுக் கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள் ளது. |
| 7 | 2017ஆம் ஆண்டின் மீன் மற்றும் மீன் உற்பத்திகளை ஏற்றுமதி செய்தல், இறக்குமதி செய்தல் மற்றும் மீள் ஏற்றுமதி செய்வதை முகாமைத்துவப்படுத்தும் ஒழுங்குவிதிகள்.<br>(2004/4 ஆம் இலக்க 2017.04.11 ஆந் தேதிய அதி விஷேட வர்த்தமானி பத்திரிகை) | பாராளுமன்றத்தின் அனுமதி பெற்றுக் கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள் ளது. |

| தொ இல | சட்டரீதியான நடவடிக்கை | முன்னேற்றம் |
|---|---|---|
| 8 | 2015ஆம் ஆண்டின் சட்ட விரோத, அறிக்கைப் படுத்தப்படாத மற்றும் முறையற்ற கடற்றொழில் நடவடிக்கைகளை விலக்குவதற்கு, தடுப்பதற்கு மற்றும் அமுல்படுத்துவதற்கு துறைமுக அரச வழிமுறைகளை அமுல்படுத்தல் சம்பந்தமான ஒழுங்குவிதிகள் (திருத்தியது)<br>2027/31 ஆம் இலக்க 2017.07.13 ஆந் தேதிய அதி விஷேட வர்த்தமானி பத்திரிகை) | பாராளுமன்றத்தின் அனுமதி பெற்றுக் கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள் ளது. |
| 9 | 1984ஆம் ஆண்டின் கரை வலை ஒழுங்குவிதிக் கோவை.<br>(2065/33ஆம் இலக்க 2018.04.05ஆந் தேதிய அதி விஷேட வர்த்தமானி பத்திரிகை) | பாராளுமன்றத்தின் அனுமதி பெற்றுக் கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள் ளது. |
| 10 | வெளிநாட்டுக் கொடி அரசுடன் கடற்றொழில் படகுகளில் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபடும் இலங்கையர்களுக்கான குறைந்த கொள்கை சம்பந்தமான ஒழுங்குவிதிக் கோவை (திருத்தியது) | அதி விஷேட வர்த்தமானியில் வெளியிடுவதற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| 11 | 1996ஆம் ஆண்டின் கடற்றொழில் நடவடிக்கை ஒழுங்குவிதிக் கோவை (திருத்தியது) | சட்ட குறிப்பு வரைஞர் திணைக்களத்தின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. |
| 12 | நீல நீந்தும் நண்டுகள் பிடிக்கும் கடற்றொழில் ஒழுங்குவிதிக் கோவை | அதி விஷேட வர்த்தமானியில் வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள் ளது. |
| 13 | இலத்திரணியல் லொக் புக் தொகுதியின் மூலம் இலங்கை நீர்ப்பரப்பில் படகு கண்காணிப்பு மற்றும் தரவு முகாமைத்துவ ஒழுங்குவிதிகள் | அதி விஷேட வர்த்தமானியில் வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள் ளது. |

### 2.3.2. தேசிய மற்றும் சர்வதேச சட்டப் பிரமாணத்துக்கு அமைவாக கடற்றொழில் நடவடிக்கையை உறுதியான முகாமைத்துவம், ஒழுங்குபடுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்

| செயற்பாடு | பிரதான செயலாற்று வெளிக்காட்டுதல் | இலக்கு | இலக்கை அனுகுதல் | முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| கடற்றொழில் படகு பதிவு செய்தல் | முதற் பதிவை மேற்கொண்டு பதிவுச் சான்றிதழ் வழங்கல் மற்றும் பதிவைப் புதுப்பித்தல். | 57098 | 53685 | 94% |
| ஆழ் கடலில் கடற்றொழில் செயற்பாட்டு நடவடிக்கையை முறையாக முன்னெடுத்தல் | கடற்றொழில் நடவடிக்கை அனுமதிப் பத்திரம் வழங்கல். | 55854 | 46363 | 83% |
| | படகேட்டி அனுமதிப் பத்திரம் வழங்கல் | 1500 | 2552 | 170% |
| கடற்றொழிலாளர்களின் தகைமையை உறுதிப்படுத்தல் | கடற்றொழிலாளர்களுக்காக அடையாள அட்டை வழங்குதல் | 1700 | 1643 | 96.6% |
| கரைவலை கடற்றொழில் நடவடிக்கையை ஒழுங்குபடுத்தல் | கரைவலை அனுமதிப் பத்திரம் வழங்கல் | 1244 | 496 | 40% |
| அலங்கார மீன் கைத்தொழிலை விருத்தி | அலங்கார மீன் ஏற்றுமதிக்கு அனுமதிப் பத்திரம் வழங்கல் | 75 | 55 | 73.3% |
| | அலங்கார மீன் இறக்குமதிக்கு அனுமதிப் பத்திரம் வழங்கல் | 70 | 51 | 72.8% |
| சிங்கி இறால் சம்பந்தமாக கடற்றொழில் நடவடிக்கையை முறைப்படுத்தல் | சிங்கி இறால் ஏற்றுமதி செய்வதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கல் | 130 | 101 | 77.7% |
| | சிங்கி இறால் தம்வசம் வைத்திருப்பதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கல் | 30 | 7 | 23% |
| முத்துச் சிப்பி சம்பந்தமாக கடற்றொழில் நடவடிக்கையை முறைப்படுத்தல | முத்துச் சிப்பி ஏற்றுமதி செய்வதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கல் | 20 | 24 | 120% |
| | முத்துச் சிப்பி ஏற்றி இறக்கல் மற்றும் தம்வசம் வைத்திருப்பதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கல | 40 | 46 | 115% |
| கடலட்டை சம்பந்தமாக கடற்றொழில் நடவடிக்கையை முறைப்படுத்தல | கடலட்டை ஏற்றுமதி செய்வதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கல் | 50 | 66 | 132% |
| | கடலட்டை ஏற்றி இறக்கல் மற்றும் தம்வசம் வைத்திருப்பதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கல் | 70 | 76 | 108% |

| செயற்பாடு | பிரதான செயலாற்று வெளிக்காட்டுதல் | இலக்கு | இலக்கை அணுகுதல் | முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| ஏனைய கடற்றொழில் நடவடிக்கையை முறைப்படுத்தல் | செயற்கை அடித்தள படிநிலை அடுக்குகளிலான பவழப் பாறைத் தொகுதிகளை ஏற்றுமதி செய்வதற்கான அனுமதிப் பத்திரம் வழங்கல் | 10 | 02 | 20% |
| | அலங்கார பொருட்கள் கைத்தொழிலுக்கு இறந்த சிப்பி ஓடுகளை ஏற்றுமதி செய்வதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கல் | 50 | 39 | 78% |
| | வெளிநாட்டு படகுகளின் மூலம் துறைமுக சேவை மற்றும் வசதிகளை வழங்கல். | 50 | 105 | 210% |
| | மீன் மற்றும் மீன் உற்பத்திகளுக்கு ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் மீள் ஏற்றுமதி அனுமதிப் பத்திரம் வழங்கல் | 200 | 195 | 97.5% |

# 3. கடற்றொழில் அபிவிருத்திப் பிரிவு

## 3.1 குறிக்கோள்

வினைத்திறன் மற்றும் சூழலுக்கு இணக்கமான நவீன தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்தி கடற்றொழில் கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல் ஒழுங்குபடுத்தலின் மூலம் மீன் உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல் மற்றும் மீனவ சமூகத்தினரின் சமூக மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல் என்பன மூலம் இலங்கையின் தேசிய பொருளாதாரத்துக்கு அதிக பங்களிப்பை வழங்கலே கடற்றொழில் அபிவிருத்திப் பிரிவின் பிரதான கடமையாகும்.

## 3.2. செயற்பாடுகள்

கடற்றொழில் அபிவிருத்திப் பிரிவின் பிரதான செயற்பாடுகளாவன:

- கடற்றொழில் படகுகளைப் பதிவு செய்வதல் ஒழுங்கமைத்தல் மற்றும் கண்காணித்தல்.
- கடற்றொழில் படகுகளின் வடிவமைப்புக்கான அனுமதியை வழங்கல்.
- கடற்றொழிலாளர்கள் மற்றும் மீனவ அமைப்புகளைப் பதிவு செய்தல்.
- கடற்றொழில் கைத்தொழிலில் நவீன தொழில் நுட்ப முறைகளை அறிமுகம் செய்தலும் அவற்றை விரிவுபடுத்தலும்.
- கரையோர நிர்மாணப் பணிகள் அல்லது செயற்றிட்டங்களுக்கான தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கைகள் அல்லது சூழலுக்கான தாக்கம் தொடர்பிலான சிபாரிசுகள் ஆகியவற்றை வழங்குதல்.
- கடற்றொழில் கைத்தொழில் சார் கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்தல்.
- மாற்று வருமானம் ஈட்டும் செயற்பாடுகளை செயற்படுத்தல்.
- கடற்றொழில் மானிய திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- கடற்றொழில் கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- கடற்றொழிலாளர்களுக்கான காப்புறுதி ஓய்வூதியம் மற்றும் ஏனைய சமூகப் பாதுகாப்பு தொடர்பிலான முறை திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- திடீர் விபத்து சந்தர்ப்பங்களில் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபடல்.
- கடனீரேரி அபிவிருத்திச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

மேலும் மாவட்ட அலுவலகங்களுடன் இணைந்து வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரித்தல், அடைவுகள் தொடர்பில் மீட்டல் மற்றும் விசேட கடற்றொழில் பிரச்சினைகள் தொடர்பில் இப் பிரிவின் முன்னெடுப்புக்களை இணைத்தல் ஆகியனவும் இப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## 3.3. செயலாற்றுகை 2018

3.3.1.கடற்றொழிலாளர்கள்/ கடற்றொழில் படகுகளைப் பாதுகாக்கும் பொருட்டு கடற்றொழில் கைத்தொழிலை ஒழுங்குமுறைப்படுத்தல்.

| விடயங்கள் | 2018 இலான அடைவுகள் |
|---|---|
| காப்புறுதி செய்யப்பட்ட கடற்றொழில் படகுகளின் எண்ணிக்கை | 27,983 |
| காப்புறுதி பெற்ற கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை | 69,143 |
| கடற்றொழில் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிக்கும் கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை | 2,033 |
| வழங்கப்பட்ட கடலோட்டு தகுதிச் சான்றிதழ்களின் எண்ணிக்கை | 22,337 |
| பதிவு செய்யப்பட்ட கடற்றொழில் படகுகள் | 23 |
| பதிவு செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்கள் விநியோகஸ்தர்கள் | 10 |

### 3.3.2. 1 மில்லியன் திடீர் விபத்துக் காப்புறுதி

கடற்றொழிலாளர்கள் முகங் கொடுக்கும் ஆபத்து நிலையைக் கவனத்திற் கொண்டு கடற்றொழிற் குடும்பங்களின் பொருளாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் பல்வேறு காப்புறுதித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் 2016ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் கடற்றொழிலாளர்களுக்கான அறவீடுகள் எதுவுமற்ற திடீர் விபத்துக் காப்புறுதித் திட்டம் ஒன்று புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டது.

இதன் மூலம் ரூபா ஒரு மில்லியன் காப்புறுதியானது கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் போது திடீர் விபத்துக்களின் காரணமாக இறந்த மீனவர்களில் தங்கியிருந்தோருக்கு வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் மற்றும் தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியம் ஆகியவற்றின் கூட்டிணைப்பில் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் இவ் வருடத்தில் இத்திட்டம் மூலம் 14 குடும்பங்கள் பயன் பெற்றன.

### 3.3.3. திவி சவ்ர கடற்றொழில் காப்புறுதி

கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம் சிலிங்கோ காப்புறுதி நிறுவனத்துடன் இணைந்து செயற்படுத்தும் திவி சவ்ர திடீர் விபத்துக் காப்புறுதி திட்டமானது கடலிலோ மற்றும் தரையிலோ ஏற்படும் சகல விபத்துகளையும் (மரணம், முழுமையாக அல்லது பகுதியாக அங்கவீனமடைதல், காணாமற் போதல்) உள்ளடக்கியதாகும். அங்கத்தவர் ஒருவர் வருடமொன்றுக்கு செலுத்த வேண்டிய முழுத் தொகை (வரிகள் அடங்கலாக) ரூபா 1,036.00 ஆகும்.

இக் காப்புறுதித் திட்டத்தின் மூலம் திடீர் விபத்துக் காரணமான மரணம், முழுமையாக அல்லது பகுதியாக அங்கவீனமடைதல் போன்றவைகளுக்கு நட்டஈடாக ரூபா 1,000,000/- உம் இயற்கை மரணத்துக்கான நட்டஈடாக ரூபா 2,000,000/வும் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| காப்புறுதித் திட்டத்தில் புதிதாக இணைந்தோர் | 8,148 |
| புதுப்பித்தோர் | 58,422 |
| 2018இல் பயனடைந்த கடற்றொழிலாளர் குடும்பங்களின் எண்ணிக்கை | 58 |

## 3.3.4. தியவர திரிய கடன் திட்டம்

கடற்றொழில் படகுகளின் தரத்தை மேம்படுத்தல் மற்றும் கடற்றொழில் கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல், நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் ஊடாக தரமான மீன்களை உற்பத்தி செய்தல் ஆகியன ஊடாக கடற்றொழிலாளர்களுக்கு உதவி வழங்குதல் ஆகியவற்றின் பொருட்டு கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் இலங்கை வங்கியுடன் இணைந்து ‘‘தியவர திரிய’’ எனும் குறைந்த வட்டிக் கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இதன் கீழ் ஒரு பயனாளிக்கு ரூபா 15 மில்லியன் அதிகபட்ச கடன் தொகையாக வழங்கப்படுவதுடன் வட்டி வீதங்கள் பின்வருமாறு அமைகின்றன;

- கடன் தொகை ரூபா 2 மில்லியனுக்குக் குறைந்ததாயின் கடன் பெறுநரிடமிருந்து அறவிடப்படும் வட்டி 5% மாகும்.
- கடன் தொகை ரூபா 2 மில்லியனுக்கு மேற்பட்டதாயின் கடன் பெறுநரிடமிருந்து அறவிடப்படும் வட்டி 7% மாகும்.
- இந்த கடன் திட்டத்தில் ஒரு பயனாளிக்கு அரசின் மூலம் 4% வட்டி உதவியாக வழங்கப்படுகிறது.
- கடன் வழங்கலின் போது கடற்றொழில் படகுகளை மேம்டுத்தல், 55 அடிக்கு மேற்பட்ட படகுகளைக் அமைத்தல், கடற்றொழிலில் நவீன தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்தல் (RSW, CSW), நீள் தூண்டில் பொறிமுறை மற்றும் வின்ஞ் உபகரணத்தைப் பொருத்துதல் ஆகிய நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.
- பயனாளிகள் 513 பேருக்கு கடன் வழங்கப்பட்டுள்ளதுடன் மொத்த கடன் தொகை ரூபா 1265.58 மில்லியனாகும்.

## 3.3.5. 50% மானியத் திட்டத்தின் கீழ் 55அடிக்கு மேற்பட்ட கடற்றொழில் படகுகளை மேம்படுத்தல்

தரமான மீன்களை அதிகளவில் அறுவடை செய்வதற்கு, நவீன உபகரணங்கள் பொருத்தப்பட்ட 55 அடிக்கு மேற்பட்ட படகுகளின் தயாரிப்பின் அவசியம் அறியப்பட்டதையடுத்து

அரசாங்கத்தினால் 2016 லிருந்து 50% மானியத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் கீழ் 2017ஆம் ஆண்டில் 55 அடிக்கு மேற்பட்ட 05 படகுகளின் தயாரிப்பு ஆரம்பிக்கப்பட்டு 2018ஆம் ஆண்டில் தயாரிப்புச் செயற்பாடுகள் தொடரப்படுகிறது.

### 3.3.6.கடற்றொழில் படகுக்குகளில் நவீன தொழில்நுட்பத்தை புகுத்துவதற்கான 50% மானியத் திட்டம்

இதன் கீழ் கடற்றொழில் படகுகளுக்கு நீள் தூண்டில் அலகு, வின்ஞ் உபகரணம் மற்றும் குளிரூட்டற் தொகுதி ஆகியவற்றை வழங்குதல் அல்லது பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்கு 50% மானியம் வழங்கப்பட்டு வருவதுடன், 2018ம் ஆண்டு இம் மானியத் திட்டம் மூலம் 1.75 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டது. முானியதத திட்டம் மூலமான அடைவுகள் வருமாறு;

| விடயம் | பயனாளர்களின் எண்ணிக்கை | ஒதுக்கப்பட்ட தொகை மில்லியன் ரூபாய்கள் | அடைவு |
|---|---|---|---|
| 156 நீள் தூண்டில் அலகுகளை வழங்கல் | 156 | 52 | 156 நீள் தூண்டில் அலகுகள் அனுமதிக்கப்பட்டது. |
| 47 வின்ஞ் உபகரணஙகளை வழங்கல் | 47 | 30 | வின்ஞ் உபகரணம் வழங்கப்பட்டது. |
| கடற்றொழிற் படகுகளில் குளிரூட்டற் தொகுதிகளை மேம்படுத்தல் | 20 | 93 | 20 படகுகளில் குளிரூட்டற் தொகுதிகள் மேம்படுத்தப்பட்டது. |

### 3.3.7.தியவர பியச வீடு மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்

முறையான வீடு மற்றும் சுகாதார வசதிகள் அற்ற கடற்றொழிற் குடும்பங்களுக்கு வீடு மற்றும் சுகாதார வசதிகளை வழங்கும் நோக்குடன் 2017இல் இந் நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் கீழ் புதிதாக வீட்டை நிர்மாணிப்பதற்கு பயனாளி ஒருவருக்கு ரூபா 03 இலட்சமும், வீட்டைத் திருத்துவதற்கு பயனாளர் ஒருவருக்கு ரூபா ஒரு இலட்சமும் வழங்கப்பட்டு வருகின்றது. அவ்வாறே சுகாதார வசதிகள் இல்லாத கடற்றொழிற் குடும்பங்களுக்கு மலசலகூடமொன்றைப் புதிதாக அமைப்பதற்கு ரூபா 30,000/-வும், ஏற்கனவேயுள்ள மலசலகூடமொன்றைப் பழுதுபார்ப்பதற்கு ரூபா 15,000/- மும் வழங்கப்பட்டு வருகிறது.

இதற்கமைய 2017ஆம் ஆண்டில் ரூபா 34.5 மில்லியன் செலவில் புத்தளத்தில் ''கீரிமுந்தலம்'', திருகோணமலையில் ''சாகரபுர'' மற்றும் தங்காலையில் ''விகாரமஹாதேவிபுர'' ஆகிய மாதிரி கடற்றொழிலாளர் வீடமைப்பு செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 2018ஆம் ஆண்டில் 427 பயனாளர்களுக்கு வீட்டைத் திருத்துவதற்கும், 371 பயனாளர்களுக்கு சுகாதார வசதிகளை வழங்குவதற்குமாக ரூபா 38.4 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

### 3.3.8.கடனீரேரி அபிவிருத்தி

சிக்கலான உயிரியல் பல்வகைமைகளுடனான கடனீரேரிகளை நீடித்து நிலைக்கும் வண்ணம் பாதுகாப்பதும் கடனீரேரிகளை சார்ந்திருக்கும் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தலுமே இந் நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். இதற்கமைய இலங்கையில் தற்போது இனங்காணப்பட்டுள்ள 116 கடனீரேரிகளில் 18 கடனீரேரிகள் இந்

நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்ய பிரேரிக்கப்பட்டுள்ளதுடன், 18 கடனீரேரிகளில் பின்வரும் கடனீரேரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது;

- புத்தளம் கடனீரேரி
- இரேகாவ கடனீரேரி
- நாயாறு கடனீரேரி
- அறுகம்பே கடனீரேரி

**3.3.8.1.கடனீரேரிகளை எல்லைப்படுத்தல்**

அனுமதியற்ற கட்டிட நிர்மாணங்கள் மற்றும் சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதான பல்வேறுபட்ட மனித நடவடிக்கைகள் ஆகியவற்றின் காரணமாக கடனீரேரி மாசடைதல் இன்றைய நிலையில் மிகப் பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இதன் காரணமாக கடனீரேரிகளை பாதுகாக்கப்பட்ட பிரதேசமாக ஆக்குவதற்கு கடனீரேரிகளை எல்லைப்டுத்தலானது இந்த வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. மேலும் இதற்குத் தேவையான 19,888 எல்லைக்கற்கள் கொள்முதல் செய்வதற்கும் ரூபா 30 மில்லியன் செலவில் எல்லைக் கற்கள் உற்பத்தி செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**3.3.8.2. சூழலுக்குப் இணக்கமான மீன்பிடி உபகரணங்களின் பயன்பாடு**

சூழலுக்கு இணக்கமான மீன்பிடி உபகரணங்களின் பயன்பாட்டினை ஏற்படுத்தும் பொருட்டு ரூபா 55 மில்லியன் செலவில் தேர்ந்தெடுக்கப்பட்ட 1,310 பயனாளர்களுக்கு சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தக் கூடியதும் சட்டவிரோதமானதுமான மீன்பிடி உபகரணங்களுக்குப் பதில் சூழலுக்கு இணக்கமான மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்படவுள்ளது.

**3.3.8.3. கடனீரேரிகளில் உற்பத்தித்திறனை அதிகரித்தல்**

இதன் பொருட்டு ரூபா 29,187 மில்லியன் செலவில் 13 கடனீரேரிகளில் 148,500 திலாப்பியா இளம் பருவங்கள் மற்றும் 17 கடனீரேரிகளில் 10,821 இறால் இளம் பருவங்கள் வைப்பிடலுக்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**3.3.8.4. கடனீரேரிகளை அண்மித்த பிரதேசங்களில் கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்**

இதன் கீழ் ரூபா 195 மில்லியன் நிதி ஒதுக்கீடானது கடனீரேரி இறங்கு துறைகளின் அபிவிருத்தி, கடனீரேரிகளுக்கான பாதை அபிவிருத்தி, இறங்கு துறைகளை ஆழமாக்கல் ஆகிய செயற்பாடுகள் 1197 மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறே இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 995 பயனாளர்களுக்கு சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

### 3.3.9. வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

கடனீரேரிகளை சார்ந்திருக்கும் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு 376 பயனாளர்களுக்கான ரூபா 66.65 மில்லியன் செலவிலான மோதா மீன் செய்கை மற்றும் கடல் தாவரச் செய்கை செயற்றிட்டமானது ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் கூடுகளின் தயாரிப்பும் மற்றும் இளம் பருவங்களின் கொள்வனவும் நடைபெற்று வருகிறது.

இவ்வாறே அறுவடையின் பின்னான இழப்புக்களை குறைக்கும் பொருட்டு கடற்றொழிற் குடும்பங்களுக்கு முக்கியமாக கடற்றொழிற் குடும்பப் பெண்களுக்கு கருவாடு, மாசி உற்பத்தி செய்வது தொர்பான தொழில்நுட்ப அறிவுடன் கருவாடு, மாசி உற்பத்தியை ஆரம்பிப்பதற்கு அல்லது மேம்படுத்துவதற்கு அடிப்படையான உபகரணமும் வழங்கப்பட்டது.

இதற்கமைய மாத்தறை மாவட்டத்தில் 156 பயனாளர்களுக்கு மாசி உற்பத்தி செய்வதற்கும், புத்தளம் மாவட்டத்தில் 60 பயனாளர்களுக்கு கருவாடு உற்பத்தி செய்வதற்கும் தேவையான தொழில்நுட்ப அறிவுடன் அடிப்படையான உபகரணமும் வழங்கப்பட்டது.

### 3.3.10. கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்

அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் கீழ் அனைத்து கடற்றொழில் மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக பல்வேறுபட்ட கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அதனடிப்படையில் இவ்வருடத்தில் இறங்கு துறைகளின் அபிவிருத்தி, கலங்கரை விளக்குகளை வழங்குதல், கடனீரேரிகளுக்கான பாதை அபிவிருத்தி, மீன் விற்பனை நிலையங்களை மேம்படுத்தல், வலை தயாரிப்பு நிலையங்கள் அல்லது சனசமூக நிலையங்களை நிர்மாணித்தல், ஆற்றுவாய் மற்றும் கடனீரேரிகளை ஆழமாக்கல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டன.
இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பின்வரும் கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் ரூபா 92 மில்லியன் ஒதுக்கீட்டில் நடைமுறைப்பட்டன.

| தொ. இல. | செயற்றிட்டங்கள் | மாவட்டம் | பயனாளர்களின் எண்ணிக்கை | செலவிடப்பட்ட தொகை மில்லியன் ரூபா |
|---|---|---|---|---|
| 01 | 200 மீற்றர் வரையான உட்பாதைக்கு கொங்கிறீட் இடல் | மாத்தறை | 200 | 0.7 |
| 02 | மிரிஸ்ஸ பண்டாரமுல்ல நுகஹேன பதை பாதை பழுதுபார்த்தல் | மாத்தறை | 150 | 1.939 |
| 03 | முள்ளிபுரம் பாடசாலை நிர்மாணம் | யாழ்ப்பாணம் | 300 | 3.23 |
| 04 | உதயபுரம் வலை பிண்ணும் நிலையம் நிர்மாணம் | யாழ்ப்பாணம் | 30 | 03 |
| 05 | கரையோர பாதை மேம்படுத்தல் - திருகடலூர் | திருகோணமலை | 600 | 2.0 |
| 06 | கொட்பே பல்தொகுதி நிலையத்துக்கு நீர், மின்சாரம் வழங்கல் | திருகோணமலை | 550 | 0.0443 |
| 07 | சிறிமாபுர கடற்கரையோரத்தில் LED மின்குமிழ் வழங்கல் மற்றும் மின்சாரம் இணைத்தல் | திருகோணமலை | 300 | 0.5397 |
| 08 | மீனவர் சனசமூக நிலையம் பழுதுபார்த்தல் மற்றும் பாதுகாப்பு கட்டு நிர்மாணித்தல் - வடமாராச்சி | மட்டக்களப்பு | 250 | 0.612 |
| 09 | கடல் நுழை வழி நிர்மாணித்தல் (250 மீற்றர்) வடமாராச்சி | மட்டக்களப்பு | 250 | 2.0 |
| 10 | மீனவர் சனசமூக நிலையம் நிர்மாணம் - காயன்கேணி | மட்டக்களப்பு | 250 | 2.0 |
| 11 | பளயடிதோன வீதிக்கு கொங்கிறீட் இடல் (500 மீற்றர்) | மட்டக்களப்பு | 200 | 2.0 |

| தொ. இல. | செயற்றிட்டங்கள் | மாவட்டம் | பயனாளர்களின் எண்ணிக்கை | செலவிடப்பட்ட தொகை மில்லியன் ரூபா |
|---|---|---|---|---|
| 12 | மீனவர் சனசமூக நிலையம் நிர்மாணம் - தியவத்தாவன் | மட்டக்களப்பு | 420 | 2.0 |
| 13 | பிங்வத்த மீனவர் சனசமூக நிலையம் நிர்மாணம் | களுத்துறை | | 8.191 |
| 14 | முகத்துவாரம் படகுத்துறை நுழைவு வீதி நிர்மாணம் 300 மீற்றர் | கல்முனை | 1900 | 1.135 |
| 15 | சிங்கப்பூர் மீனவர் கிராமத்துக்குச் செல்லும் பாதை செப்பனிடல் 1.5 கி.மீ. | கல்முனை | 240 | 1.0 |
| 16 | வெல்ல அத்தர படகுத்துறைக்கு கலங்கரை விளக்கு மற்றும் மின்சாரம் வழங்கல் | காலி | 150 | 0.02 |
| 17 | புனித செபஸ்தியார் மீனவர் கிராமத்துக்கு நுழைவு பாதை கொங்கிறீட் இடல் | நீர்கொழும்பு | 200 | 1.18 |
| 18 | குடாபாடு கடற். பரிசோதகர் பிரிவின் வடக்கு வீதி கொங்கிறீட் இடல் | நீர்கொழும்பு | 100 | 0.264 |
| 19 | மாங்குளி கிராமிய மீனவ அமைப்புக்குரிய சிறுவர் அபிவிருத்தி நிலையம் பழுதுபார்த்தல் | நீர்கொழும்பு | 75 | 1.499 |
| 20 | அலுத்குறுவ கடற். பரிசோதகர் பிரிவின் சேனநாயக்க கடற்றொழில் படகுத்துறைக்கு பாதுகாப்பிடல் | நீர்கொழும்பு | 25 | 0.986 |
| 21 | இரத்தினபுர படகுத்துறை நிர்மாணம் மற்றும் பாதை காப்பிடல் நிர்மாணம் | நீர்கொழும்பு | 150 | 0.455 |
| 22 | சின்னகுருத்து பன புனித பேதுரு மாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் படகுத்துறைக்கு பாதை நிர்மாணம் | மஹவெவ | 40 | 0.583 |
| 23 | வேன்னப்புவ தெற்கு கடற். பரிசோதகர் பிரிவில் தும்பலதெனிய தல்தெக்க கடற்றொழில் படகுத்துறை அமைந்துள் வீதி கொங்கிறீட் இடல் (50 மீற்றர ) | மஹவெவ | 400 | 0.299 |
| 24 | கி/ இரணவில கடற். கிராமத்தில் இருந்து கி/ இரணவில கடனீரேரி படகுத்துறை வரையான பாதைக்கு தார் ஊற்றுதல் (300 மீற்றர் ) | மஹவெவ | 80 | 1.799 |
| 25 | வடக்கு தொடுவாவ கூட்டுறவுக்கு அருகிலான பாதைக்கு எதிரில் சந்திக்கும் பொரல் பாதை 300 மீற்றர் தார் இடல் | மஹவெவ | 275 | 1.798 |
| 26 | கி/ மொறகெட்டிஆர தொட்டு அத்தாவ கடனீரேரிக்கு நீர் வழிந்தோடும் பக்க அணை நிர்மாணித்தல் | தங்காலை | 400 | 0.395 |

| தொ. இல. | செயற்றிட்டங்கள் | மாவட்டம் | பயனாளர்களின் எண்ணிக்கை | செலவிடப்பட்ட தொகை மில்லியன் ரூபா |
|---|---|---|---|---|
| 27 | குடாவெல்ல / வ. கிராமோதய மாவத்தை கொங்கிறீட் இடல் | தங்காலை | 250 | 0.353 |
| 28 | குடாவெல்ல / மே. மோதரவத்த மாவத்தை கொங்கிறீட் இடல் | தங்காலை | 300 | 0.819 |
| 29 | குடாவெல்ல / ம. மாவத்தை கல் பிடித்தல் | தங்காலை | 250 | 0.429 |
| 30 | குடாவெல்ல / களப்பு கொட மஹவெல்ல நுழை வழிக்கு பக்க அணைக்கட்டு நிர்மாணம் | தங்காலை | 300 | 1.99 |
| 31 | குடாவெல்ல படகுத்துறை தயாரித்தல் - கொரே அடிய | புத்தளம் | 230 | 0.52 |
| 32 | பாதை கொங்கிறீட் இடல் - கொரே அடிய | புத்தளம் | 230 | 2.0 |
| 33 | நடை பதை நிர்மாணித்தல் - கந்தகுளி ஈச்சன் வாடி | புத்தளம் | 150 | 1.0 |
| 34 | நடை பதை நிர்மாணித்தல் - கந்தகுளி நீர்கொழும்பு | புத்தளம் | | 1.0 |
| 35 | கந்தகுளி ஆற்றுவாய் மணல் அகற்றுதல் | புத்தளம் | 100 | 0.5 |
| 36 | மஹவெவ சந்தியிலிருந்து ஆனக்குத்தி வரை 1 கி. மீ. வீதி கொங்கிறீட் இடல் | புத்தளம் | 200 | 1.9 |
| 37 | குறிஞ்சபிட்டி குருசடி படகுத்துறை ஆழப்படுத்தல் | புத்தளம் | 125 | 0.5 |
| 38 | பாலாவி வீதி நிர்மாணம் | கிளிநொச்சி | 80 | 1.5 |
| 39 | செபஸ்தியன்புரம் சனசமூக நிலையம் நிர்மாணம் | கிளிநொச்சி | 100 | 2.5 |
| 40 | செம்மலை வீதி நிர்மாணம் | முல்லைத்தீவு | | 1.5 |
| 41 | உப்புவெலி பாதை நிர்மாணம் | முல்லைத்தீவு | | 3.5 |
| 42 | பஹஜ்ஜ கடனீரேரிக்குச் செல்லும் கட்டிக் கல் பிடித்தல் | தங்காலை | 250 | 1.0 |
| 43 | மொரக்கட்டி ஆர மேற்கு இஹலகொட திரு. டீ.வீ. பிரேதாச வீட்டுக்கு அருகில் உள்ள பாதை செப்பனிடல் | தங்காலை | 250 | 0.999 |
| 44 | மொரக்கட்டிஆர மேற்கு ஹிக்கஹவத்த வீதி அபிவிருத்தி செய்தல். | தங்காலை | | 0.9997 |
| 45 | குரு பொக்குண கூட்டுறவு மாவத்தை எஞ்சிய பகுதி கொங்கிறீட் இடல் | தங்காலை | 300 | 0.5864 |
| 46 | உடவெவ வீதி கட்டிக் கல் பிடித்து அபிவிருத்தி செய்தல். | தங்காலை | 200 | 0.9997 |
| 47 | பன்வில வெட்ட பாதை எஞ்சிய பகுதி கட்டிக் கல் பிடித்து அபிவிருத்தி செய்தல். | தங்காலை | 250 | 0.9999 |

| தொ. இல. | செயற்றிட்டங்கள் | மாவட்டம் | பயனாளர்களின் எண்ணிக்கை | செலவிடப்பட்ட தொகை மில்லியன் ரூபா |
|---|---|---|---|---|
| 48 | நோட்டல் பிட்டி தெற்கு கிராம அலுவலர் பிரிவு பொரல், 2ஆம் குறுக்கு வீதி கட்டிக் கல் பிடித்தல் | தங்காலை | 250 | 0.9997 |
| 49 | தங்காலை பிர. செய. பிரிவில் மஹவெல ஊரன்பிலிஸ்சுஆர வீதிக்கு காண் நிர்மாணம். | தங்காலை | 300 | 0.840 |
| 50 | மஹவெல விகாரை வீதிக்கு அருகில் வாய்க்கால் நிர்மாணித்தல். | தங்காலை | 250 | 0.9998 |
| 51 | கல்கஹ கடைக்கு அருகில் இருந்து பிரியந்த குமார அவர்களின் வீடு வரை கட்டிக் கல் பிடித்தல் | தங்காலை | 200 | 0.999 |
| 52 | மேடில்ல மெுனு மாவத்தை முதலாம் குறுக்குத் தெரு கொங்கிறீட் இடல் | தங்காலை | 350 | 0.8798 |
| 53 | இதிகொட பொக்குண வடக்கு வேவல்தெனிய இடத்துக்குச் செல்லும் பாதைக்கு கட்டிக் கல் பிடித்தல் | தங்காலை | 250 | 0.7562 |
| 54 | மொரகெட்டிஆர கிழக்கு வலவத்த கடற்கரைக்குச் செல்லும் வீதியின் எஞ்சிய பகுதிக்கு கட்டிக் கல் பிடித்தல் | தங்காலை | 300 | 0.756 |
| 55 | மொரகெட்டிஆர கிழக்கு கொட்டுஅத்தாவவீதியின் எஞ்சிய பகுதிக்கு கட்டிக் கல் பிடித்தல் | தங்காலை | 300 | 0.999 |
| 56 | மொரகெட்டிஆர கிழக்கு தொட்டுஅத்தாவ கடனீரேரி பாதைக்கு பெட்டி மதகு நிர்மாணித்தல். | தங்காலை | 350 | 0.882 |
| 57 | மாவெல்ல தெற்கு புஞ்சிசிங்க அவர்களின் நிவெஸ்வெலக்குச் செல்லும் பாதைக்கு கொங்கிறீட் இடல் | தங்காலை | 250 | 0.33 |
| 58 | யாயவத்தை வெலிவலகொட ரணவீர ஜயதிஸ்ஸ எஞ்சிய பகுதிக்கு கட்டிக் கல் பிடித்தல் | தங்காலை | 350 | 0.281 |
| 59 | சிறுவர் மித்துரு கிராமத்தின் 153ஆம் இலக்க வீட்டுக்கு அருகில் இருந்து வீதியின் எஞ்சிய பகுதிக்கு கட்டிக் கல் பிடித்தல் | தங்காலை | 300 | 0.998 |
| 60 | பட்ட அத்த தெற்கு குருபொக்குண துறைமுகத்துக்குச் செல்லும் வீதியின் ஆரம்பத்திலிருந்து பிட்ட குச்ச கல் பிடித்து அபிவிருத்தி செய்தல் | தங்காலை | 250 | 0.999 |

| தொ. இல. | செயற்றிட்டங்கள் | மாவட்டம் | பயனாளர்களின் எண்ணிக்கை | செலவிடப்பட்ட தொகை மில்லியன் ரூபா |
|---|---|---|---|---|
| 61 | பட்ட அத்த தெற்கு குருபொக்குண துறைமுகத்துக்குச் செல்லும் குருக்கு வீதியின் திரு பிரியந்த அவர்களின் வீட்டின் அருகில் உள்ள வீதியின் ஆரம்பத்திலிருந்து பிட்ட குச்ச கல் பிடித்து அபிவிருத்தி செய்தல் | தங்காலை | 300 | 0.999 |
| 62 | பட்ட அத்த தெற்கு குருபொக்குண துறைமுகத்துக்குச் செல்லும் குருக்கு வீதியின் லிதேயாய பதை ஆரம்பத்திலிருந்து பிட்ட குச்ச கல் பிடித்து அபிவிருத்தி செய்தல் | தங்காலை | 200 | 0.999 |
| 63 | பட்ட அத்த தெற்கு குருபொக்குண துறைமுகத்துக்குச் செல்லும் குருக்கு வீதியின் திரு சாலியா அவர்களின் வீட்டின் அருகில் உள்ள வீதியின் ஆரம்பத்திலிருந்து பிட்ட குச்ச கல் பிடித்து அபிவிருத்தி செய்தல் | தங்காலை | 250 | 0.999 |
| 64 | பாணகல கல்முல்ல சுனாமி கிராமத்தின் 3வது பட்டுமக திருமதி தீபமாலி அவர்களின் வீட்டின் அருகில் இருந்து குச்சல் குருக்கு வீதி அபிவிருத்தி செய்தல் | தங்காலை | 300 | 0.999 |
| 65 | வெல்லவாய பிர. செய. பிரிவில் மீனவர் கிராமத்து வீதியின் எஞ்சிய பகுதி அபிவிருத்தி செய்தல். | தங்காலை | 200 | 01 |
| 66 | ரெக்காவ கிழக்கு பிர. செய. பிரிவின் ஒறுவெல்ல சந்தி ரான்ஸ் போமருக்கு அருகிருந்து வடக்குப் பக்கமான வீதிக்கு கட்டிக்கல் பிடித்து அபிவிருத்தி செய்தல். | தங்காலை | 200 | 0.999 |
| 67 | வெல்லவாய பிர. செய. பிரிவில் உசேகர அருகின் பாதையிலிருந்து திரு ஷாந்த அவர்களின் வீடு வரை குருக்கு வீதி கட்டிக்கல் பிடித்து அபிவிருத்தி செய்தல் | தங்காலை | 250 | 1.377 |
| 68 | நெடோல்பிட்டிய பிர. செய. பிரிவில் கிராமத்து அருகின் பாதை (கதாங்க வெவ ஆர) கட்டிக்கல் பிடித்து அபிவிருத்தி செய்தல் | தங்காலை | 200 | 0.999 |
| 69 | வெல்லவாய பிர. செய. பிரிவில் உசேகர அருகின் பாதையிலிருந்து திரு சுனில் அவர்களின் வீடு வரை குருக்கு வீதி கட்டிக்கல் பிடித்து அபிவிருத்தி செய்தல் | தங்காலை | 300 | 1.143 |
| 70 | நெடோல்பிட்டிய தெற்கு பிர. செய. பிரிவில் கிராமத்து அருகின் தெற்கு பக்கமாக உள்ள பாதை கட்டிக்கல் பிடித்து அபிவிருத்தி செய்தல் | தங்காலை | 250 | 0.999 |

| தொ. இல. | செயற்றிட்டங்கள் | மாவட்டம் | பயனாளர்களின் எண்ணிக்கை | செலவிடப்பட்ட தொகை மில்லியன் ரூபா |
|---|---|---|---|---|
| 71 | ரெக்காவ பொரலுவ திரு எஸ்.பீ. மாட்டின் அவர்களின் வீட்டின் அருகில் இருந்து நாரா நிறுவனம் வரையான வீதிக்கு கட்டிக்கல் பிடித்து அபிவிருத்தி செய்தல் | தங்காலை | 250 | 0.998 |
| 72 | பொரலுவ சுற்றாடல் பரிசோதனை நிலையத்துக்கு அருகில் இருந்து நாரா நிறுவனம் வரையான வீதிக்கு கட்டிக்கல் பிடித்தல் | தங்காலை | 250 | 0.999 |
| 73 | குடாவெல்ல ம/ ம சமகி மாவத்தை கட்டிக்கல் பிடித்து அபிவிருத்தி செய்தல் | தங்காலை | 250 | 0.429 |
| 74 | கி/ மொரகட்டிஆர கொட்டுஅத்தாவ கடனீரேரி நீர் பாய்வதற்கு வடிகாண் அமைத்தல் | தங்காலை | 400 | 0.395 |
| 75 | புஹஜ்ஜாவ கடனீரேரிக்குச் செல்லும் வீதி (லபுஹேன வீதி) திரு ஏ.ஏ. 600சிரில் அவர்களின் வீட்டில் இருந்து சசந்திம நிலந்த அவர்களின் வீடு வரை பாதைக்கு கட்டிக் கல் பிடித்தல். | தங்காலை | 50 | 0.9991 |
| 76 | ரெக்காவ பொரலுவ திரு எஸ்.பீ. மாட்டின் அவர்களின் வீட்டின் அருகில் இருந்து நாரா நிறுவனம் வரையான வீதிக்கு கட்டிக்கல் பிடித்து அபிவிருத்தி செய்தல் | திருகோணமலை | 600 | 1.785 |
| 77 | கிண்ணயா குறிஞ்சாங்கேணி கடனீரேரி பாதை கொங்கிறீட் இடல். | திருகோணமலை | | 2 |
| 78 | கிண்ணியா காக்கமுனை வாடி வீதி கொங்கிறீட் இடல் | திருகோணமலை | | 2 |
| 79 | கிண்ணியா மதினா நகர் வீதி கொங்கிறீட் இடல் | திருகோணமலை | | 2 |
| 80 | கிண்ணியா தாமரவில்லு கடனீரேரி வீதி கொங்கிறீட் இடல் | திருகோணமலை | | 2 |
| 81 | கிண்ணியா நடுத்தீவு பள்ளிய முன்னால் உள்ள வீதி கொங்கிறீட் இடல் | திருகோணமலை | 200 | 2 |
| 82 | எரகண்டி இரண்டாவது கடற்றொழில் வீதி கொங்கிறீட்இடல் | திருகோணமலை | 400 | 1.745 |
| 83 | சுமாதான கிராம உள்வீதி கொங்கிறீட் இடல் | கல்முனை | | 2 |
| 84 | ஆனக்குத்தியில் இருந்து மனத்தீவுச் சந்தி வரையான வீதியில் மதகு (05) பதித்தல். | புத்தளம் | 150 | 1.167 |
| 85 | நிந்தவூர் குறுக்கு வீதிக்கு கொங்கிறீட் இடல் | கல்முனை | 150 | 2.0 |
| 86 | புஹஜ்ஜாவ ஹஹபெலஸ்ஸ வீதியில் கால்வாய் நிர்மாணித்தல் | தங்காலை | 100 | 1.524 |

# 4. கடற்றொழில் உற்பத்திகள் தரக் கட்டுப்பாட்டு பிரிவு

## 4.1 இலக்கு

ஐரோப்பிய வர்த்தக சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்படும் மீன் உற்பத்திகளுக்கான ஐரோப்பிய ஆணைக்குழுவின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யும் பொருட்டு கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தின் கீழ் நிறுவப்பட்ட இப் பிரிவானது, 1999.01.04 ஆந் திகதி முதல் செயற்பட்டு வருகிறது.

## 4.2 குறிக்கோள்

இப்பிரிவின் பிரதான குறிக்கோளானது, 1998இன் மீன் உற்பத்திகள் (ஏற்றுமதி) ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக இலங்கையிலிருந்து சர்வதேச சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்படும் மனித நுகர்வுக்கான மீன் உற்பத்திகளின் தரம் மற்றும் பாதுகாப்பானது உயர்ந்த மட்டத்தில் பேணப்படுவதை உறுதி செய்வதாகும்.

மேலும் 1997இன் மீனைக் கையாளல் மற்றும் விநியோகம் செய்தல் தொடர்பிலான ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் உள்நாட்டுச் சந்தையிலுள்ள மீன் மற்றும் மீன் உற்பத்திகளின் தரம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கையெடுத்தல், 2014இன் மீன்பிடி தொடர்பிலான தகவு சேகரிப்பு ஒழுங்குவிதிகளால் பிரதி செய்யப்பட்ட 2012இன் மீன்பிடி தொடர்பிலான தகவு சேகரிப்பு ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் 2016 ஜனவரி முதல் மீன் ஏற்றுமதிகளின் சட்டதிட்டங்களுக்கு அமைவான தன்மையை உறுதிப்படுத்தல் ஆகியனவும் இப்பிரிவின் குறிக்கோள்களாகும்.

## 4.3. செயற்பாடுகள்

மேற்குறிப்பிடப்பட்ட குறிக்கோளினை அடைவதற்கு இப் பிரிவின் மூலம் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- மீன் சார் உற்பத்தி நிறுவனங்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்குதல்.
- ஏற்றுமதியின் பொருட்டு மீன் சார் உற்பத்தியில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு உற்பத்தியில் ஈடுபடும் அதிகாரத்தை வழங்கல்.
- மீன் சார் உற்பத்தி நிறுவனங்களை ஒழுங்குமுறையாகப் பரிசோதித்தல்.
- மீன்கள் தரையிறக்கும் இடங்களை பரிசோதித்தல்.
- ஏற்றுமதிக்காக மீன்களை வழங்கும் படகுகளைப் பரிசோதித்தல்.
- ஏற்றுமதிக்காக தரையிறக்கும் இடத்திலிருந்து உற்பத்தி நிறுவனம் வரை உடன் மீன் கொண்டு செல்லப்படுவதைப் பரிசோதித்தல்.
- சகல மீன் மற்றும் மீன் உற்பத்திகளுக்குமான ஒவ்வொரு ஏற்றுமதிக்கும் சுகாதர தரச் சான்றிதழ் (Health Certificate) வழங்கல்.
- ஏற்றுமதி செய்யப்படும் மீன் உற்பத்திகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு பரிசோதனை அறிக்கைகளை (Test Reports) வழங்கும் ஆய்வுகூடங்களுக்கு அனுமதி வழங்கல்.

- உத்தியோகபூர்வ மாதிரி சேகரித்தலை சம்பந்தப்பட்ட இடங்களிலிருந்து பெறப்படும் மாதிரிகளை அனுமதிக்கப்பட்ட ஆய்வுகூடங்களில் பரிசோதனைக்கு உட்படுத்துவதன் மூலமாக நடைமுறைப்படுத்தல்.

- ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமையவொழுகாத மீன் சார் உற்பத்தி நிறுவனங்கள், படகுகள் மற்றும் மீன்களைத் தரையிறக்கும் இடங்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்தல்.

- செய்யப்படும் போதியளவு பாதுகாப்பற்ற மீன் உற்பத்திகளின் ஏற்றுமதி சம்பந்தமாக முறைப்பாடுகள் கிடைப்பின் உரிய நடவடிக்கை எடுத்தல்.

- மீன் மற்றும் மீன்சார் உற்பத்திகளின் தரம் பாதுகாப்பு மற்றும் மீன்களைக் கையாளும் முறை என்பன சம்பந்தமாக ஏற்றுமதிக்காக மீன்களை விநியோகிக்கும் மீன்பிடிப் படகுகளின் பணியாளர் குழுவுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தலும் நடாத்தலும்.

- நீர்வளர்ப்பு உற்பத்திகளில் மீதிக்கான கண்காணிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நீர்வளர்ப்பு உற்பத்திகளில் (இறால்) பயன்படுத்தப்படும் நுண்ணுயிர் எதிரிகள் மற்றும் இரசாயனப்பதார்த்தங்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தலும் நடாத்தலும்.
- மீன்பிடிக்கான சான்றிதழ் வழங்கல்.

## 4.3.செயலாற்றுகை 2018

**4.3.1.மீன் சார் உற்பத்தியில் தரக் கட்டுப்பாட்டினை மேற்கொள்ளலும் மற்றும் பின் அறுவடை வீண்விரயத்தைக் குறைத்தலும்.**

**4.3.2.புதிய மீன் சார் உற்பத்தி நிறுவனங்களைப் பதிவு செய்தலும் பதிவு செய்யப்பட்டவற்றை மீளப்புதுப்பித்தலும்.**

**மீன் சார் உற்பத்தி நிறுவனங்களைப் பதிவு செய்தல் தொடர்பான அடைவு - 2018**

| | |
|---|---|
| ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு (EU) ஏற்றுமதி செய்யும் மீன் சார் உற்பத்தி நிறுவனங்கள் | 34 |
| ஐரோப்பியா ஒன்றியம் சாரா நாடுகளுக்கு (Non EU) ஏற்றுமதி செய்யும் மீன் சார் உற்பத்தி நிறுவனங்கள் | 10 |
| பொதி செய்யும் நிலையங்கள் (சீனா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள்) | 17 |

**4.4.3 சுகாதாரச் சான்றிதழ் வழங்குதல்**

மீன் உற்பத்திகளை ஏற்றுமதி செய்யும் ஒவ்வொரு தடவையும் ஏற்றுமதி செய்யும் நாட்டின் தேவைப்பாட்டிற்கும் அமைவாக சுகாதாரச் சான்றிதழானது தரக் கட்டுப்பாட்டு பிரிவினால் வழங்கப்படுகிறது.

முக்கிய ஏற்றுமதி சந்தைகளாவன:

ஐரோப்பிய ஒன்றிய நாடுகள்
அமெரிக்கா
ஜப்பான்
ஐரோப்பிய ஒன்றியம் சாரா நாடுகள்

| | |
|---|---|
| வழங்கப்பட்ட சுகாதாரச் சான்றிதழ்களின் எண்ணிக்கை | 42,923 |
| வழங்கப்பட்ட மீன்பிடிக்கான சான்றிதழ்களின் எண்ணிக்கை | 11,441 |

சுகாதாரச் சான்றிதழ் ஒன்றுக்கு 200 ரூபா வீதம் அறவிடப்படுவதன் மூலம் ஈட்டப்பட்டு வரவு வைக்கப்பட்ட அரச வருமானம் 8,584,600 ரூபா.

### 4.4.4. சுகாதாரச் சான்றிதழின் ஊடு ஏற்றுமதி செய்யப்பட்ட கடல் உணவுகள்

| | |
|---|---|
| சுகாதாரச் சான்றிதழுடன் ஏற்றுமதி செய்யப்பட்ட கடலுணவு | 24,838 மெற்றிக் தொன் |
| ஏற்றுமதிகளின் மூலம் பெறப்பட்ட அந்நிய செலாவணி | 42,085 மில்லியன் ரூபாய்கள் |

### 4.3.5. உத்தியோகபூர்வ மாதிரி சேகரித்தல்

01.01.2018 இலிருந்து 31.12.2018 வரையான காலப் பகுதிக்குள் பெறப்பட்ட மாதிரிகளின் விபரம்.

| மாதிரிகள் சேகரிக்கப்பட்ட இடம் | மாதிரிகளின் வகை | பெறப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| மீன் சார் உற்பத்தி நிறுவனங்கள் | நுண்ணங்கிகளுக்கான பகுப்பாய்வு | |
| | நீர் | 21 |
| | ஐஸ் | 21 |
| | மீன்/ இறால் | 23 |
| | இரசாயனப் பகுப்பாய்வுகள் | |
| | ஹிஸ்ட்அமைன் | 17 |
| | பார உலோகங்கள் | 20 |
| இறால் பண்ணைகள் | இரசாயன பகுப்பாய்வுகள் | |
| | களை கொல்லிகள் | 4 |
| | பார உலோகங்கள் | 4 |
| | நுண்ணுயிர் எதிரிகள் | 36 |
| | மைகோ டொக்சின் | 2 |

# 05. கடற்றொழில் நடவடிக்கைப் பிரிவு

## 5.1 நோக்கம்

தேடுதல் நடவடிக்கை, படகு கண்காணிப்பு மற்றும் சர்வதேச கடற்றொழில் நடவடிக்கை ஆகிய மூன்று அலகுகள் இந்த நடவடிக்கைப் பிரவுடன் இணைக்கப்பட்டுள்ளது. இலங்கை அண்ணிய பொருளாதார பிராந்தியம் மற்றும் இதற்கு அப்பாலான கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபடும் கடற்றொழில் படகுகள் மற்றும் கரைக்கிடையில் வானொலி தொலைத் தொடர்பினை பேணிச் சென்று ஆழ் கடலில் மற்றும் கரையோர கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபடும் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்தல் மற்றும் படகு கண்காணிப்பு அலகின் ஊடாக சர்வதேச கடலில் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபடும் தேசிய பல்தின கடற்றொழில் படகுகளை கணிகாணித்தல் மற்றும் அறிக்கையின் மூலம் சர்வதேச கடற்றொழில் பிரமாணங்களுக்கு மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக முறையான ஆழ்கடல் கடற்றொழில் நடவடிக்கையை உறுதிப்படுத்துவது இந்தப் பிரிவின் நோக்கமாகும்.

## 5.2 பொறுப்புகள்

மேற்குறித்த நோக்கத்தை அடைவதற்கு கீழ் குறிப்பிடப்படும் விடயங்களை இந்தப் பிரிவின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

01. கடற்றொழில் படகு மற்றும் கரைக்கிடையில் வானொலி தொலைத் தொடர்பு வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
02. கடற்றொழில் படகுகளின் தொலைத் தொடர்பு நடவடிக்கைக்கு அனுமதிப் பத்திரம் மற்றும் அழைப்புக் குறியீடு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
03. கடற்றொழிலாளர்கள் மற்றும் படகுகளுக்கு விபத்து ஏற்படும் சந்தர்ப்பத்தில் காப்புறுதிக்கு தகவல் தயாரித்து வழங்கல்.
04. வெளிநாடுகளில் சிறை பிடிக்கபப்ட்ட மீனவர்கள் மற்றும் படகுகளை விடுவிப்பதற்கு மற்றும் இந்நாட்டுக்குள் கொண்டு வருதல்.
05. சர்வதேச கடற் பரப்பில் இயந்திரக் கோளாறு காரணமாக மிதந்து செல்லும் படகுகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
06. சிறிய மற்றும் ஒருநாட் படகுகளுக்கு தொலைத் தொடர்பு வசதிகள் வழங்கல் மற்றும் மீனவ மக்களுக்கு அறிவுறுத்தல்.
07. நாளாந்தம் காலநிலை பற்றிய அறிக்கை மற்றும் சீரற்ற காலநிலை பற்றிய தகவல்களும் நாளாந்தம் வழங்கல்.
08. படகு கண்காணிப்பு அலகின் மூலம் வழங்கப்படும் தகவலுக்கு அமைய படகுகளுக்கு அறிவுறுத்தல்.
09. அனுமதியற்ற வெளிநாட்டு கடற்றொழில் படகுகள் மற்றும் தொழிலாளர் சம்பந்தமாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல்.
10. விபத்துக்குட்படும் மீனவர்கள் மற்றும் படகுகளை மீட்டுக் கொண்டு வருதல்.
11. ஆழ்கடலில் கடற்றொழில் நடவடிக்கையிலிருந்து விலகும் பல்தின படகுகளின் படகு கண்காணிப்பு உபகரணங்களை அகற்றுதல்.
12. ஆழ்கடலில் கடற்றொழில் கைத்தொழிலில் இணையும் பல்தின படகுகளுக்கு படகு கண்காணிக்கும் உபகரணம்பொருத்ததல்.
13. படகு கண்காணிக்கும் அலகு மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட ஏனைய பிரிவுகளின் அலுவலர்களுக்கு பயிற்சி வழங்கள்.
14. மு.ப. 7.00 மணி, பி.ப. 2.00 மற்றும் மு.ப. 10.00 மணிக்கு கீழ் குறிப்பிடப்படும் தகவலின் கீழ் அறிக்கை பெற்றுக் கொள்ளல்.

15. கடற்றொழில் படகு துறைமுகத்துக்குள் பிரவேசிப்பது சம்பந்தமான அறிக்கை மற்றும் ஒவ்வொரு படகுகளினதும் வரைபடம் பெற்றுக் கொள்ளல்.
16. 48 கிலோ மீற்றருக்கு உட்படும் துறைமுக எல்லைக்குள் அண்மிக்கும் கடற்றொழில் படகுகள் பற்றிய அறிக்கை பெற்றுக் கொள்ளல்.
17. தேசிய எல்லையை மீறி பயணிக்கும் கடற்றொழில் படகுகள் பற்றிய அறிக்கை பெற்றுக் கொள்ளல்.
18. துறைமுகத்திலிருந்து வெளியேறும் கடற்றொழில் படகுகள் பற்றிய அறிக்கை பெற்றுக் கொள்ளல்.
19. படகுகளின் பெற்றரி இணைப்பைத் துண்டிக்கும் கடற்றொழில் படகுகள் பற்றிய அறிக்கை பெற்றுக் கொள்ளல்.
20. பெற்றரி இணைப்பை துண்டித்திருக்கும் படகின் உள்ளிருக்கும் பெற்றரியின் துண்டிப்பு பற்றிய அறிக்கை பெற்றுக் கொள்ளல்.
21. படகுகளில் மீள பெற்றரி செயற்படும் நிலைக்கு வருவது பற்றிய அறிக்கை பெற்றுக் கொள்ளல்.
22. கால எல்லைக்குள் செயற்படாதுள்ள படகுகள் பற்றிய அறிக்கை பெற்றுக் கொள்ளல்.
23. முறையாக மேற்கொள்ளப்பட்ட சகல படகுகளின் வெளியேறல் சர்வதேச அலகுக்கு வழங்கல்.
24. விபத்துக்குட்படும் படகுகளை இனம் காணல் மற்றும் தகவல் தேடுதல் நடவடிக்டகைப் பிரிவுக்கு வழங்கல்.
25. ஆழ் கடலில் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபடும் கடற்றொழில் படகுகளின் தகவல்கள் பெற்றுக் கொள்ளல் மற்றும் முகாமைத்தவம் செய்தல்.
26. ஆழ் கடலில் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபடும் கடற்றொழில் படகுகளின் தகவலை உறுதிப்படுத்தல்.
27. ‘‘லொக் புக்’’ அறிக்கை தரவு களஞ்சியத்துக்கு உட்படுத்தல் மற்றும் முகாமைத்துவம்.
28. தகவல்களை ஆய்வு செய்தல் மற்றும் சட்ட நடவடிக்கை எடுத்தல்.

## 5.3. 2018இன் செயலாற்றுகை

### 5.3.1 கடற்றொழில் படகு மற்றும் தரைக்கிடையில் வானொலி தொலைத் தொடர்பு பரிமாற்றத்துக்கு வசதிகள் பெற்றுக் கொடுத்தல் மற்றும் அதற்கான நடவடிக்கை எடுத்தல்.

கடற்றொழில் படகு மற்றும் தரைக்கிடையில் வானொலி தொலைத் தொடர்பு பரிமாற்றத்துக்கு வசதிகள் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைக்கு பிரதேச வானொலி நிலையத்தின் ஊடாக பெற்றுக் கொள்ளும் தகவல்களின் மூலம் கொழும்பு பிரதான அலுவலகத்தின் மூலம் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொடர்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளதுடன், கரை மற்றும் கடல் கடற்றொழில் படகுகளுகிடையில் 24 மணி நேரமும் தொடர்புகளை வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே இதன் மூலம் படகுகளுக்கு காலநில பற்றிய அறிக்கையும் திடீர் விபத்துக்கு உட்படும் பாதிப்புகளை மதிப்பிடல் மற்றும் கால நிலை பற்றிய தகவல் நாளாந்தம் வழங்கப்படுவதுடன் படகு உரிமையாளர்களின் செய்திகளைப் பெற்றுக் கொள்ளல்/ அதனை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடற்றொழில் படகுகளிலிருந்து கிடைக்கும் அவசர செய்திகளுக்கு அச்சந்தர்ப்பத்திலிருந்து அந்த விடயம் நிறைவு பெறும்வரை தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்த விடயத்தக்கு கொழும்பு பிரதான அலுவலகத்தின் நடவடிக்கை தொடர்புபடுத்தப் பட்டுள்ளதுடன், இதற்கு பிரதேச வானொலி நிலையம் கற்பிட்டி, சிலாபம், தொடுவாவ, கொஸ்வாடிய, வெண்ணப்புவ, நீர்கொழும்பு, கொழும்பு, பேருவளை, அம்பலாங்கொட, ஹிக்கடுவை, காலி, வெலிகம, தெவிநுவர, நில்வெல்ல, குடாவெல்ல, தங்காலை, கலமெட்டிய, ஹம்பாந்தோட்டை, கிரந்த, கல்முனை, திருகோணமலை போன்ற இடங்களில் நிறுவப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், வாழைச்சேனை மற்றும் திக்கோவிட்ட ஆகிய கடற்றொழில் துறைமுகங்களிலும் இந்த பிரதேச வானொலி நிலையம் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான வானொலி இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி நிலையங்களில் வருடக் கணக்காக பயன்படுத்தப்பட்டு வந்த பழைய இயந்திரங்கள் மற்றும் பழுதடைந்த வானொலி இயந்திரங்களுக்குப் பதிலாக புதிய மிக சக்தி வாய்ந்த இயந்திரங்களை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் இது சம்பந்தமான ''அண்டனா'' தொகுதி தொழில்நுட்ப தரத்துக்கு அமைய புதிதாக நிறுவுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தொடர்பு நடவடிக்கை மிக உயர்ந்த மட்டத்தில் பேணுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### 5.3.2 கடற்றொழில் படகுகளின் தொலைத் தொடர்பு நடவடிக்கைக்கு அனுமதிப் பத்திரம் வழங்கல் மற்றும் அழைப்புக் குறியீடு பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கை

சர்வதேச சட்டதிட்டங்களுக்கு அமைவாக நடப்பதற்கு ஆழ் கடலில் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபடும் கடற்றொழில் படகுகளுக்கு அழைப்புக் குறியீடு பெற்றுக் கொள்வதற்கு வானொலி தொடர்பு ஆணைக் குழு மற்றும் பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து செயற்படும் கடற்றொழில் படகுகளுக்கு அழைப்புக் குறியீடு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சர்வதேச சட்டதிட்டங்களுக்கு அமைய கடற்றொழில் படகுகளுக்கு வானொலி தொலைத் தொடர்பு இயந்திரம் பயன்படுத்துவதற்கு அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு வானொலி குறியீட்டு ஆணைக்குழுவுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொண்டு கடற்றொழில் படகுகளுக்கு வானொலி தொடர்பு இயந்திரம் பயன்படுத்துவதற்கு 05 வருட கால எல்லைக்குள் அனுமதி பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| வானொலி தொலைத் தொடர்பு இயந்திரம் பயன்படுத்துவதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கிய படகுகளின் எண்ணிக்கை | 1,050 |
| வானொலி தொலைத் தொடர்பு இயந்திரத்துக்கு அழைப்புக் குறியீடு வழங்கப்பட்ட கடற்றொழில் படகுகளின் எண்ணிக்கை | 752 |

### 5.3.3 கடற்றொழிவ் படகுகள் மற்றும் மீனவர்கள் விபத்துக்குள்ளாகும் சந்தர்ப்பத்தில் தேவையான தகவல்கள் ஒன்றுதிரட்டி வழங்கல்

கடற்றொழில் படகுகள் மற்றும் மீனவர்கள் விபத்துக்குள்ளாகும் சந்தர்ப்பங்களில் அது சம்பந்தமான நடவடிக்கை எடுத்தல் மற்றும் அவர்களின் காப்புறுதி நட்டஈடு பெற்றுக் கொள்வதற்க காப்புறுதி கூட்டுத்தாபனம் மற்றும் படகு உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் தகவல்களையும் சமர்ப்பித்தல். இந்த தகவல் வழங்குவது வருடத்துக்கு 50 – 100 க்கு இடையிலான படகுகளுக்கு மட்டும் இது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த தகவல் சம்பந்தப்பட்ட பிரதேச அலுவலகங்கள் மற்றும் பிரதான அலுவலகங் களிலுமிருந்து பெறப்பட்ட அறிக்கைக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 2018இல் ஆழ் கடலில் அறிக்கைப்படுத்தப்பட்ட திடீர் விபத்துக்களின் எண்ணிக்கை | **195** |
| திடீர் விபத்தின்போது மரணத்தைத் தழுவிய மீனவர்களின் எண்ணிக்கை | 18 |
| திடீர் விபத்தின்போது பழுதடைந்த கடற்றொழில் படகுகளின எண்ணிக்கை | 06 |

இந்த திணைக்களத்தில் உள்ள விபத்துக்குட்பட்ட படகுகள் மற்றும் படகோட்டிகளைக் காப்பாற்றுநுதல் மற்றும் துரித சிகிச்சை வழங்குவதற்கு மற்றும் துரிதமாக கரைக்கு கொண்டு வருவதற்கு பாதிப்படைந்த படகு இல்லாவிடின் அதனைக் கண்டுபிடிக்க கடற் படையினரின் உதவி பெறப்பட்டுள்ளது. எமது கோரிக்கையின் பேரில் பாதிப்படைந்த மற்றும் அவர்களின் உயிரைக் காப்பதற்கு நிரந்தரமான முறையான பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், இதற்கு இலங்கை கடற்படைக்கு ரூபா 2.5 மில்லியன் வரை இதற்கு செலவிடப்பட்டுள்ளது.

### 5.3.4 வெளிநாடுகளில் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்கள் மற்றும் படகுகளை விடுவித்து இந்நாட்டுக்கு கொண்டு வருதல்

| நாடு | சிறை பிடிக்கப்பட்ட மீனவர்கள் எண்ணிக்கை | சிறை பிடிக்கப்பட்ட படகுகளின் எண்ணிக்கை | விடுவிக்கப் பட்ட மீனவர்கள் எண்ணிக்கை | விடுவிக்கப் பட்ட படகுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| இந்தியா | 14 | 04 | 09 | 01 |
| மாலைதீவு | 30 | 05 | 24 | 04 |
| சீசெல்ஸ் | 06 | 01 | 06 | - |
| ஈரான் | - | - | 04 | - |
| மீள் ஒன்றியம் | 02 | 12 | 06 | - |

இவர்களை விடுவிப்பதற்கு வெளிநாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் இந்தியா, மாலைதீவு, பிரான்ஸ் மற்றும் லண்டனில் உள்ள இலங்கைத் தூதுவராலயங்களின் உதவி பெறப்பட்டுள்ளது.

### 5.3.5 தேசிய, சர்வதேச மற்றும் வெளிநாடுகளுக்குரிய கடற் பரப்பில் மிதந்து சென்றுள்ள படகுகளை மீட்டுக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

| விடுவிக்கப்பட்ட மீனவர்கள் தொகை | விடுவிக்கப்பட்ட படகுகள் தொகை |
|---|---|
| **945** | **189** |

இந்தியா, மாலைதீவு, இந்துதோனேசியா, மலேசியா, அந்தமான் தீவுகள், மியன்மார், பங்களாதேஷ், யெமன், சீ செல் நாடுகள், அவுஸ்திரேலியா, ரியுனிசயா (பிரான்ஸ் தீவுகள்) மற்றும் தியாகுரோசியா ஆகிய நாடுகளின் கடற்றொழில் படகுகள் அதிகளவில் இயந்திரக் கோளாறினால் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்ததுடன் இலங்கை கடற்படையின் படகு, வர்த்தக கப்பல் மற்றும் கடற்றொழில் படகின் ஆகியன மூலம் இப்படகுகள் காப்பற்றப்பட்டன. இவ்வாறே கடலில் திடீர் விபத்துக்குள்ளானோர் மற்றும் திடீர் சுகயீனமுற்றோர் இலங்கை கடற்படையின் உதவியுடன் விரைவாகச் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

### 5.3.6 சிறிய/ ஒருநாட் படகுகளுக்கு தொடர்பு வசதிகள் பெற்றுக் கொடுத்தல்

கரையோர கடற்றொழில் கைத்தொழிலில் ஈடுபடும் சிறிய படகின் உரிமையாளர்களுக்கு அவசர காலநிலை மாற்றம் மற்றும் அதன் விளைவுகள் பற்றி மதிப்பீடு விரைவில் மீனவ சமூகத்தினருக்குப் பெற்றுக் கொடுத்து அதன் உயிராபத்தைத் தடுக்கும் நோக்குடன் டயலக் நிறுவனம் திணைக்களத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது. இதற்கமைய இதன் ஒரு செயற்றிட்டமாக காலி மாவட்டத்தில் 100 மீனவ குழுவுக்கு முதலாவது துாரநேக்கை அறியும் செயற்றிட்டமாக செயற்படுத்தப்படுகின்றது. அத்துடன் இதற்கு காலநிலை விஞ்ஞான திணைக்களத்தின் பூரண கண்காணிப்பின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. 2019இல் இந்த குறும் செய்திச் சேவை வழங்குவதற்கு டயலக் நிறுவனம் ரூபா 2.5 மில்லியன் வழங்கியுள்ளது.

2018இல் சிறிய படகுகளுக்கு செய்தி வழங்கும் வழிமுறையை முறையாகப் பேணுவதற்கு 05 உபகரணங்கள் ஈடுபடுத்துவதற்கு கொழும்பு தலைமை அலுவலகத்தின் நிதியம் மற்றும் ஒதுக்கீட்டு வசதிகளை வழங்கியுள்ளது.

### 5.3.7 மீனவ மக்களுக்கு அறிவூட்டல்

மீனவ சமூகம்/ கடற்றொழிலாளர்கள் மற்றும் படகு உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தும் நடவடிக்கை அத்தியாவசிய விடயமாக இருப்பதால் கடற்றொழிலாளர்களின் ஆயுள் பாதுகாப்புக்கான ஆலோசனை மற்றும் திடீர் விபத்தின்போது கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் இதுபோன்று கரையில் மற்றும் அது சம்பந்தமாக திடீர் உதவிச் சேவை பெற்றுக் கொள்ளும் விடயம் பற்றியும் காலநிலை திடீர் மாற்றம் போன்றவற்றிற்கு அமைய எற்படும் சூறாவளியின் போது ஆயுள் பாதுகாப்புக்கு கடைப்பிடிக்க வேண்டிய முறை மற்றும் வானொலி இயந்திரத்துக்கு அனுமதிப் பத்திரம பெற்றுக் கொள்ளும் விடயம் பற்றி அறிவூட்டுவதற்கு அத்தியாவசியமாக இருப்பதால் அதனை முறையாக முன்னெடுத்துத் செல்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்.

படகுகளில் ஈடுபடுபவர்களின் போதை வஸ்து பாவனை அதிகரித்துச் செல்லல் மற்றும் இதனால் ஏற்படும் பரவலான விளைவுகள் கப்பல் பாதையில் விபத்துக்கள் நிகழ்வது அதிகரித்துச் செலவதுடன் ஆயுள் பாதிப்பு/ படகு பாதிப்படைவதும் அதிகரித்துள்ளது. இவ்வாறு அமைப்புகளாக அனுமதியற்ற இடம்பெயர்வுக்கு படகு பயன்படுத்துவதும் பரவலாக காணப்படுகின்றது. படகுகள் பாரியளவில் ஆழ்கடலில் இயந்திரக் கோளாறு ஏற்படுவதும் அதிகரித்துள்ளது. முக்கியமாக வேறு நாடுகளின் கடல் எல்லையைத் தாண்டுவதாலும் அந்நாடுகளில் கைது செய்யப்பட்டு சிரமத்துத்துடன் இராஜதந்திர மட்டத்தில் அந்தந்த நாடுகளில் காப்பாற்றும் நிலையங்களுக்கு அறிவித்து அனுப்புவதும் நிகழ்ந்து வருகின்றது. எனவே படகு உரிமையாளர்கள் படகை வெளியே அனுப்புவதற்கு முன் மீண்டும் படகு கடல் பயணத்துக்கு கடலோட்டு தகுதிநிலையில் உள்ளதா என்பதை பரிசோதனை செய்து பார்ப்பதற்கு கவனம் செலுதப்பட வேண்டும். இவ்வாறு படகு உரிமையாளர்கள் மற்றும் கடற்றொழில் தொழிலாளர்கள் தரையுடன் தொடர்புகொண்டிருக்கவும் வானொலி தொலைத் தொடர்பு செய்தி பரிமாற்றங்களில் இந்த திணைக்களத்துக்கு அனுமதிக்கப்பட்ட குறியீட்டை பயன்படுத்தாது அனுமதியற்ற குறியீட்டை பயன்படுத்துவது சட்ட விரோத செயலாக இருப்பதால் அதனை நிறுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**5.3.8. கடற்றொழிலில் ஈடுபடாமலிருக்கும் ஆழ்கடல் படகுகளிலிருந்த படகு கண்காணிக்கும் உபகரணங்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்ட ஆழ்கடல் படகுகளுக்குப் பொருத்தப்பட்டன.**

| தொ. இல. | விபரம் | தொகை |
|---|---|---|
| 01 | மாற்றிப் பொருத்தப்பட்ட படகு கண்காணிக்கும் உபகரணங்கள் | 132 |
| 02 | மாற்றிப் பொருத்தப்பட்ட படகு கண்காணிக்கும் உபகரணங்கள் | 11 |

**5.3.9. நான்கு மணிநேரத்துக்கொருமுறை தகவல் பெறலும் அறிவித்தலும்**

| தொ. இல. | விபரம் | தொகை |
|---|---|---|
| 01 | செயலிழந்த படகு கண்காணிப்பு உபகரணங்கள் | 804 |
| 02 | பிற நாட்டு எல்லையை மீறுதல் | 33 |
| 03 | இடர் சமிக்ஞை மூலம் சேதம் அடைந்ததாக அறியப்பட்ட படகுகள் | 16 |

**5.3.10. புறப்பாட்டிற்கான சங்கேத எண் வழங்கல்**

கடந்த கால பயணங்களை நடப்பில் உள்ள சட்டங்களுக்கு அமைவாக ஆராய்ந்து புறப்பாட்டிற்கான சங்கேத எண் வழங்கும் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

| துறைமுகம் | வழங்கப்பட்ட சங்கேத இலக்கங்களின எண்ணிக்கை |
|---|---|
| கற்பிட்டி | 04 |
| நீர்கொழும்பு | 362 |
| திக்கோவிட்ட | 636 |
| பேருவளை | 343 |
| அம்பலாங்கொட | 119 |
| ஹிக்கடுவை | 118 |
| காலி | 639 |
| மிரிஸ்ஸ | 295 |
| தொன்ரா | 339 |
| கொட்டேகொட | 55 |
| நில்வெல்ல | 83 |
| குடாவெல்ல | 636 |
| தங்காலை | 181 |
| ஹம்பாந்தோட்டை | 80 |
| கிரிந்த | - |
| ஒலுவில் | 21 |
| வாழைச்சேனை | 43 |
| திருகோணமலை | 1004 |
| பருத்தித்துறை | 02 |

### 5.3.11.ஆழ்கடலில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் மீன்பிடிப் படகுகளின் தகவல் பெற்றுக் கொள்ளல் மற்றும் முகாமைத்துவம்

| | | |
|---|---|---|
| 1 | இறுதியாக ஆழ்கடலில் மீன்பிடி நடவடிக்கையின் எண்ணிக்கை | 17075 |
| 2 | ஆழ் கடலில் மீன்பிடி நடவடிக்கைக்குச் சார்பான அலகுக்குக் கிடைத்த பதிவுத் தாள்களின் எண்ணிக்கை | 12,784 |

### 5.3.12.ஆழ்கடலில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் படகுகளின் தகவல்களைப் உறுதிப்படுத்தல்

| | | |
|---|---|---|
| 1. | மீன்பிடி நடவடிக்கைகளுக்கு வழங்கப்பட்ட உறுதிப்படுத்திய அறிக்கைகளின் எண்ணிக்கை | 8225 |
| 2. | உறுதிப்படுத்தப்பட்ட அறிக்கை வழங்காத படகு உரிமையாளர்களுக்கு அறிவிப்புகளின் எண்ணிக்கை | 41 |

### 5.3.13.பதிவறிக்கை தரவு களஞ்சியப்படுத்தவதற்கு பதிவேற்றல் மற்றும் முகாமைத்துவம்

| | | |
|---|---|---|
| 1. | பதிவறிக்கை களஞ்சியத்தில் பதிவேற்றப்பட்ட பதிவுத் தாள்களின் எண்ணிக்கை. | 46840 |
| 2 | தவறாக accomaanying நிர்ப்புதல் மற்றும் பூரணப்படுத்தப்படாத பதிவுத் தாள்களின் எண்ணிக்கை. | 3207 |
| 3 | தவறாக accomaanying நிர்ப்புதல் மற்றும் பூரணப்படுத்தப்படாத பதிவுத் தாள்களின் நிரப்பியமை சம்பந்தமாக படகு உரிமையாளர்களுக்கு அறிவிப்புகளின் எண்ணிக்கை | 120 |

### 5.3.14. தகவல் பகுப்பாய்வு செய்தல் மற்றும் சட்ட ரீதியான நடவடிக்கை

| | | |
|---|---|---|
| 1 | படகு கண்காணிப்பு முறைமைத் தொகுதியின் மூலம் அறிக்கையிடப்பட்ட ஏனைய நாடுகளின் கடல் எல்லையை மீறியமை | 16 |
| 2 | படகு கண்காணிப்பு உபகரண செயற்பாட்டை நிறுத்தியமை | 153 |
| 3 | “சட்டவிரோத, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்கு முறையற்ற மீன்பிடி முறை (IUU Fishing)” நடைமுறைக்கான தகவல் பெற்றுக் கொள்ளல் | 70 |
| 4 | படகோட்டிக்கான அனுமதிப் பத்திரம் புறக்கணித்தல் | 23 |
| 5 | படகு புறப்படுதலை நிராகரித்தல். (Departere cancel) | 170 |
| 6 | படகு செயற்பாட்டு அனுமதிப் பத்திரம் புறக்கணித்தல் | - |
| 7 | வழக்குத் தொடர்வதற்காக ஆலோசனை பெறுதல். | 27 |
| 8 | நிர்வாக தண்டம் அறவிடுதல். | 17 |
| 9 | எச்சரிக்கை விடுத்தல் | 223 |

# 6. பயிற்சி மற்றும் ஆய்வுப் பிரிவு

## 6.1 நோக்கம்

கடற்றொழில் கட்டளைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தின் நோக்கமாவது, நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சர்வதேச சமுத்திர சட்டம் மற்றும் பிரமாணத்துக்கு அமைவாக வளங்களை முகாமைத்துவம் செய்வதன் ஊடாக இலங்கையின் தேசிய பொருளாதாரத்துக்கு முறையான பங்களிப்பு வழங்குவதற்கு கடற்றொழில் கைத்தொழிலை உறுதியாக அபிவிருத்தி செய்வது போன்ற நோக்கத்தைக் கடைப்பிடித்து மீனவர் சமூகம், கடற்றொழில் அலுவலர்களின் மற்றும் தொடர்புடைய ஏனைய தரப்பினர்களின் பங்களிப்புடன் கட்டியெழுப்படும்.

## 6.2 செயற்பாடுகள்

நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டான இப்பிரிவின் செயற்பாடுகளாவன;

1. வருடாந்த பயிற்சித் திட்டம் தயாரித்தல்.
2. திணைக்களத்தின் சகல அலுவலர்களுக்கும் பயிற்சி மற்றும் கொள்ளளவு அபிவிருத்தி பயிற்சித் திட்டம் அமைத்தல்.
3. மீனவ குடும்பங்களின் அங்கத்தவர்களின் தொழில் கல்வியை அதிகரிப்பதற்கு பயிற்சி வேலைத் திட்டம் நடாத்துதல்.
4. கடற்றொழில் படகு செலுத்துநர்களுக்கு சான்றிதழ் வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட பயற்சி நடவடிக்கைகளைக் கண்காணித்தல்.
5. பல்கலைக்கழகம் மற்றும் கடற்றொழில் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு தொழில் நிறுவனங்களால் வழற்கப்படும் பயிற்சிகளைக் கண்காணித்தல்.
6. மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப்படும் மீனவர்களை அறிவுறுத்தும் வேலைத் திட்டம் அமைத்தல்.
7. மீனவ பெண்களுக்கு மாற்று வருமானம் ஈட்டுவது சம்பந்தமாக அறிவூட்டும் நடவடிக்கை
8. சகல பங்குதாரர்களுக்குமான அறிவூட்டும் வேலைத் திட்டங்கள் நடாத்துதல்.
9. பயிற்சி வேலைத் திட்டம் சம்பந்தமான மதிப்பீடு மற்றும் பகுப்பாய்வு
10. வருடாந்த பரிசோதனை மற்றும் சுற்றி வளைப்புத் திட்டங்களைத் தயாரித்தல்.
11. சகல மாவட்ட அலுவலகங்கள், கடற்றொழில் பரிசோதகர் அலுவலகங்களை பரிசோதனை செய்தல்.
12. சகல வானொலி நிலையம் மற்றும் துறைமுக அலுவலகங்களை பரிசோதனை செய்தல்.
13. கடற்றொழில் படகு, மீன்பிடி உபகரணங்கள் தயாரிப்பு மற்றும் மீன் இரை வழங்கும் நிறுவனங்களை பரிசோதனை செய்தல் மற்றும் சுற்றி வளைத்தல்.
14. கடற்றொழில் உற்பத்தி நிறுவனங்களை பரிசோதனை செய்தல் மற்றும் சுற்றி வளைத்தல்.
15. கடனீரேரி கடற் கரையோரம் மற்றும் அந்நிய பொருளாதார பிராந்தியத்துக்குள் மேற்கொள்ளப்பம் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகளை சுற்றி வளைப்பதற்குத் தேவையான அனுமதி மாவட்ட உதவிப் பணிப்பாளர்களுக்கு வழங்குதல்.
16. மாவட்ட மட்ட ஆய்வு நடவடிக்கைகளைக் கண்காணித்தல்.
17. படகு கண்காணிப்பு அலகின் மூலம் இனம் காணப்பட்ட சட்டத்தை மீறுதல் போன்ற நடவடிக்கைகளைக் கண்காணித்தல்.
18. கடற்றொழில் படகு, மீன்பிடி உபகரணங்கள் தயாரிப்பு மற்றும் மீன் இரை வழங்கல் மற்றும் கடற்றொழில் உற்பத்தி நிறுவனங்களின் ஆய்வு நடவடிக்கை.
19. முக்கிய ஆய்வுகளை முன்னெடுத்தல் மற்றும் அந்த ஆய்வுகளுக்கு துரித கோரும் கட்டளை அலுவலர்களுக்கு வழங்கல்.

20. சகல ஆய்வு சம்பந்தமாக நீதிபதி திணைக்களத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படும் தொடர்புகளை ஆய்வு செய்தல்.
21. தொழில்நுட்ப சான்று வழங்கல்.
22. சகல மாவட்ட அலுவலகங்கள், கடற்றொழில் பரிசோதகர் அலுவலகங்கள், வானொலி நிலையங்கள் மற்றும் துறைமுக அலுவலகங்களின் ஆய்வு நடவடிக்கை.
23. கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டம் மற்றும் வெளிநாட்டு கடற்றொழில் படகுகள் சட்டத்துக்கு அமைவாக அதிகாரம் பெற்ற அலுவலர்களை பெயர்ப்படுத்துவதற்கு பணிப்பாளர் நாயகத்துக்கு சிபாரிசினை சமர்ப்பித்தல்.
24. நிர்வாக தண்டம் அறவிடும் சபையைக் கூட்டுதல் மற்றும் நிரவாக தண்டங்களை அறவிடும் முறையை நடைமுறைப்படுத்தலை கண்காணித்தல்.
25. வெளிநாட்டு பயணம் மற்றும் பயிற்சிகளில் பங்களிப்பு வழங்கும் அலுவலர்களினால் வழங்கப்படும் பரிசோதனை அறிக்கை சம்பந்தமான தகவல்களின் மீளாய்வு மற்றும் சாரம்ச அறிக்கை வழங்குதல்.
26. விழிப்பூட்டல் கையேடுகள், புத்தகங்கள் மற்றும் காணொளிகளுக்கான வரையறைகளையும் பிரதிகளையும் தயாரித்தல்.

## 6.3 அடைவுகள் 2018

### 6.3.1 பயிற்சியளித்தல் மற்றும் விழிப்பூட்டல் வேலைத் திட்டத்திலான அடைவுகள் - 2018

| பயிற்சியளித்தல் மற்றும் அறிவுறுத்தும் வேலைத் திட்டத்தின் முன்னேற்றம் | | | | |
|---|---|---|---|---|
| **தொ. இல** | **வேலைத் திட்டத்தின் விபரம்** | **நாட்கள்** | **வேலைத் திட்டத்தின் எண்ணிக்கை** | **பங்கு பற்றியவர் தொகை** |
| 01 | கடற்றொழில் ஒழுங்குவிதிகள், கட்டளைச் சட்டம் மற்றும் கடற்றொழில் முகாமைத்துவம் சம்பந்தமாக மீனவ மக்கள் மற்றும் தரப்பினர்களுக்கு அறிவுறுத்தல் | 27 | 27 | 1806 |
| 02 | கடலோட்டு அலுவலர்கள் மற்றும் கரையோர பாதுகாப்பு அலுவலர்களுக்கு கடற்றொழில் சட்டம் சம்பந்தமாக அறிவுறுத்தல் | 02 | 02 | 173 |
| 03 | துறைசார் அலுவலர்களுக்கு ஆய்வு மற்றும் சுற்றி வளைப்பு நடவடிக்கை சம்பந்தமாக அறிவுறுத்தல் | 03 | 03 | 190 |
| 04 | இயலுமையை மேம்படுத்தல் மற்றும் மீனவ பெண்களுக்கு சுற்றி வளைப்பு இயலுமை சம்பந்தமாக அடிப்படை அறிவுறுத்தல் | 02 | 02 | 129 |
| 05 | அடிப்படை கணிணி பயிற்சி வழங்கும் வேலைத் திட்டம் | 12 | 12 | 248 |
| **மொத்த வேலைத்திட்டத்தின் எண்ணிக்கை** | | 46 | 46 | 2546 |
| **மொத்த அறிவுறுத்தும் வேலைத்திட்டத்தின் எண்ணிக்கை** | | 23 | | |
| **மொத்த பயிற்சி வேலைத்திட்டத்தின எண்ணிக்கை** | | 23 | | |

## 6.3.2 ஆய்வுகள் (சர்வதேச கடல் பரப்பு) தொடர்பிலான அடைவுகள் - 2018

| குற்றங்கள் | ஆரம்பிக்கப்பட்ட ஆய்வின் தொகை | நிறைவு செய்யப்பட்ட ஆய்வின் தொகை | நிறைவு பெறாத ஆய்வின் தொகை | நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் | நிர்வாக சபைக்கு/ தொடர்புக்கு அனுப்பிய தொகை | ஆய்வின் பின்னர் தண்டம் விதித்தல் (ரூபா | இதுகால வரை அறவிடப்பட்ட பணம் (ரூ) | நீதிமன்றத்தில் விதிக்கப்பட்ட தண்டம் (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|---|
| கடல் எல்லையை மீறியமை (Border crossing) | 16 | 16 | - | - | - | - | - | - |
| ரான்ஸ்பொன்டர் நிறுத்தி வைத்தமை (VMS off) | 153 | 145 | 07 | - | 01 | 500000 | 50000 | - |
| வேறு நாட்டடில் மீன் பிடித்த வழக்கு | 13 | 13 | - | 13 | 07 | 1450000 | 1200000 | - |

## 6.3.3 ஆய்வுகள் (தேசிய நீர்ப் பரப்பு) தொடர்பிலான அடைவுகள் - 2018

| குற்றங்கள் | ஆரம்பிக்கப்பட்ட ஆய்வின் தொகை | நிறைவு செய்யப்பட்ட ஆய்வின் தொகை | நிறைவு பெறாத ஆய்வின் தொகை | நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் | நிர்வாக சபைக்கு/ தொடர்புக்கு அனுப்பிய தொகை | ஆய்வின் பின்னர் தண்டம் விதித்தல் | இதுகால வரை அறவிடப்பட்ட பணம் (ரூ) | நீதிமன்றத்தில் விதிக்கப்பட்ட தண்டம் (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|---|
| தரவு புத்தகம் சம்பந்தமான வழக்கு | 08 | 08 | - | - | - | 08 | 40000 | - |
| திரைசர் சுறா பிடித்தமை | 01 | 01 | - | - | - | - | - | விசாரணை நடைபெற்று வருகின்றது |
| அனுமதி பத்திரம் இன்றி கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டமை | 08 | 08 | - | 08 | 07 | 07 | - | 30000 |

| குற்றங்கள் | ஆரம்பிக்கப்பட்ட ஆய்வின் தொகை | நிறைவு செய்யப்பட்ட ஆய்வின் தொகை | நிறைவு பெறாத ஆய்வின் தொகை | நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் | நிர்வாக சபைக்கு/ தொடர்புக்கு அனுப்பிய தொகை | ஆய்வின் பின்னர் தண்டம் விதித்தல் | இதுகால வரை அறவிடப்பட்ட பணம் (ரூ) | நீதிமன்றத்தில் விதிக்கப்பட்ட தண்டம் (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|---|
| சட்ட விரோதமாக மீன் பிடித்தல் (தம்புவா) | 02 | 02 | - | 01 | - | - | - | 25000 |
| அனுமதி பத்திரம் இன்றி மீன் ஏற்றுமதி செய்தமை | 01 | 01 | - | 01 | - | - | - | விசாரணை நடைபெற்று வருகின்றது |
| அனுமதி பத்திரம் இன்றி முள்செறிந்த சிங்கி இறால் தம்வசம் வைத்திருந்தமை | 01 | 01 | - | 01 | - | -- | - | 30000 |
| அனுமதி பத்திரம் இன்றி கடலட்டை பிடித்தமை | 01 | 01 | - | 01 | - | - | - | 30000 |
| தடை செய்யப்பட்ட வலைகளை தம்வசம் வைத்திருந்தமை, விற்றல், விற்பனைக்காக காட்சிப்படுத்தியமை | 02 | 02 | - | 02 | - | 02 | - | 25000 |
| நஞ்சுடன்கூடிய வெடிக்கும் அல்லது (டயினமைற் உட்பட) பயன்படுத்தி மரணமடைந்த மீன்களை விற்றமை, கொள்முதல் செய்தல், கையேற்றல், தம்வசம் வைத்திருந்தமை, கொண்டு சென்றமை | 04 | 04 | - | 04 | - | - | - | விசாரணை நடைபெற்று வருகின்றது |

## 6.3.4 ஆய்வுகளின் பின்னான தண்ட அறவீடுகள் - 2018

| குற்றங்கள் | ஆய்வுகளின் பின் செலுத்தப்பட்ட தண்டப்பணம் | தற்போது வரையில் பெறப்பட்ட தண்டப்பணம் | நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட தண்டப்பணம் |
|---|---|---|---|
| கடல் எல்லையை மீறியமை (Border crossing) | 500000 | 50000 | - |
| ரான்ஸ்பொன்டர் நிறுத்தி வைத்தமை (VMS off) | 1450000 | 1200000 | - |

| குற்றங்கள் | ஆய்வுகளின் பின் செலுத்தப்பட்ட தண்டப்பணம் | தற்போது வரையில் பெறப்பட்ட தண்டப்பணம் | நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட தண்டப்பணம் |
|---|---|---|---|
| வேறு நாட்டடில மீன் பிடித்த வழக்கு | - | - | - |
| தரவு புத்தகம் சம்பந்தமான வழக்கு | 08 | 40000 | - |
| திரைசர் சுறா பிடித்தமை | - | - | இன்னும் செலுத்தப்படவில்லை |
| அனுமதி பத்திரம் இன்றி கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டமை | 07 | - | 30,000 |
| சட்ட விரோதமாக மீன் பிடித்தல் (தம்புவா) | - | | 25,000 |
| அனுமதி பத்திரம் இன்றி மீன் ஏற்றுமதி செய்தமை் | - | - | இன்னும் செலுத்தப்படவில்லை |
| அனுமதி பத்திரம் இன்றி முள்செறிந்த சிங்கி இறால் தம்வசம் வைத்திருந்தமை | - | - | 30,000 |
| அனுமதி பத்திரம் இன்றி கடலட்டை பிடித்தமை் | - | - | 30,000 |
| தடை செய்யப்பட்ட வலைகளை தம்வசம் வைத்திருந்தமை, விற்றல், விற்பனைக்காக காட்சிப்படுத்தியமை | 02 | - | 25,000 |
| நஞ்சுடன்கூடிய வெடிக்கும் அல்லது (டயினமைற் உட்பட) பயன்படுத்தி மரணமடைந்த மீன்களை விற்றமை, கொள்முதல் செய்தல், கையேற்றல், தம்வசம் வைத்திருந்தமை, கொண்டு சென்றமை | - | - | இன்னும் செலுத்தப்படவில்லை |

## 6.3.5 நிறுவன பரிசோதனைகள் 2018

| தொ. இல | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | சிங்கி இறால் ஏற்றுமதி நிறுவனங்களை பரிசோதனை செய்தல் | 06 |
| 02 | மீன்களை களஞ்சியப்படுத்தும் குளிரூட்டிகளின் தன்மையை பரிசோதனை செய்தல் | 01 |
| 03 | மீன் இரை இறக்குமதி செய்யும் நிறுவனங்களை பரிசோதனை செய்தல் | 10 |

## 6.3.6 ஆய்வுப் பிரிவின் சுற்றிவளைப்புகள் - 2018

| தொ. இல | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | தடை செய்யப்பட்ட மீன் இனங்களை தம்வசம் வைத்திருந்தல், கொண்டு சென்றமை, விற்பனைக்காக காட்சிப் படுத்தியமை | 03 |
| 02 | தடை செய்யப்பட்ட வலைகளை தம்வசம் வைத்திருந்தல், கொண்டு சென்றமை, விற்பனைக்காக காட்சிப் படுத்தியமை | 02 |
| 03 | நஞ்சு வெடிபொருள் (டயினமைற் உட்பட) பயன்படுத்தி மரணமடைந்த மீன்களை விற்றமை, கொள்முதல் செய்தல், கையேற்றல், தம்வசம் வைத்திருந்தமை, கொண்டு சென்றமை | 04 |
| 04 | அனுமதி பத்திரம் இன்றி கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டமை | 08 |
| 05 | சிங்கி இறால் ஏற்றுமதி நிறுவனங்களை சுற்றி வளைத்தல் | 06 |
| 06 | மீன்களை களஞ்சியப்படுத்தும் குளிரூட்டிகளின் தன்மையை பரிசோதனை செய்தல் | 01 |
| 07 | மீன் இரை இறக்குமதி செய்யும் நிறுவனங்களை பரிசோதனை செய்தல் | 10 |
| 08 | அனுமதிப் பத்திரம் இன்றி ஆழ்கடலில் ஏனைய நாடுகளின் அண்ணிய பொருளாதார வலயத்தில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டமை சம்பந்தமான வழக்ககள் | 10 |

# 7. பயிற்சி மற்றும் ஆய்வுப் பிரிவு

## 7.1 நோக்கம்

திணைக்களத்தில் இணையமூல சேவையைத் செயற்படுத்துவதன் மூலம் தகவல் தொழில்நுட்ப வலையமைப்பைப் பேணுவதே இப்பிரிவின் நோக்கமாகும்.

## 7.2 செயற்பாடுகள்

1. திணைக்களத்தின் அதிகாரப்பூர்வ வலைத்தளத்தை மேம்படுத்துதல் மற்றும் தொடங்குதல்
2. அதிகாரிகளின் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் கணக்குகளை தயாரித்தல்
3. திணைக்களத்தின் இணையமூல சேவையைத் செயற்படுத்தல்
4. உத்தியோகத்தர்களுக்கான தாவல்களின் விநியோகம்
5. உத்தியோகத்தர்களுக்கான அடிப்படை தகவல் தொழில்நுட்பப் பயிற்சி
6. இரண்டாம் நிலை தகவல் தொழில்நுட்பப் பயிற்சி
7. ஆவண மேலாண்மை அமைப்பு (DMS)
8. தரவுத்தளத்தினை தலைமை அலுவலகத்தில் பேணல்
9. திணைக்களத்தின் சேர்வர் முறைமை கொள்முதல் மற்றும் பராமரிப்பு செய்தல்
10. இணையப் பதிவு முறைமை
11. க்ரூவை அடிப்படையாகக் கொண்ட பார்வையாளர்

## 7.3 அடைவுகள் 2018

<u>1.திணைக்களத்தின் அதிகாரப்பூர்வ வலைத்தளத்தை மேம்படுத்துதல் மற்றும் தொடங்குதல்</u>

இந்த அலகு கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தை செயற்படுத்துகிறது, மேலும் இந்த இணையத்தளத்தில் உள்ள ஆவணங்கள் பெரும்பாலும் ஒரு எளிய உரை கோப்பாக குறியிடப்படுகின்றன. இது ஒரு எளிய கோப்பக கட்டமைப்பு மற்றும் ஒரு அரசாங்க வலைத்தளம் ஆகும், இது கோப்புகளைத் தேர்ந்தெடுக்கப் பயன்படும்.

இது தொடர்ச்சியாக திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் எந்தவொரு சேவை வழங்குநர்களிடமும், சேவை விநியோக நடவடிக்கைகளை விவரிக்கும் ஒரு விளக்கத்தையும் உள்ளடக்கியது.

திணைக்களத்தின் கீழ் கடற்றொழில் திணைக்களத்தின் தனித்தனி வலைப்பக்கங்கள் இங்கே காட்டப்படுகின்றன. திணைக்கள இணையத்தளத்தால் மேற்கொள்ளப்படும் சேவைகள் மற்றும் அபிவிருத்தி திட்டங்களின் விளக்கங்கள்.

திணைக்களத்தின் எந்தவொரு தொடர்பு விபரமும் இங்கு காணலாம் மற்றும் www.fisheriesdept.gov.lk மூலம் அணுக முடியும்.

**2.அதிகாரிகளின் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் கணக்குகளை தயாரித்தல்**

கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் அனைத்து உத்தியோகத்தர்களின் மின்னஞ்சல் கணக்குகள் ஏற்கனவே முடிவு செய்யப்பட்டுள்ளன. தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இந்த மின் அஞ்சல் முகவரி, குறிப்பிட்ட போக்குவரத்துச் சேனல்களால் செய்யப்படும் ஊழியர்கள் அலுவலர்களுக்கான பலவிதமான தொடர்புகளால் குறிப்பாகப் பயன்படுத்தப்படுகிறது

கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் அனைத்து உத்தியோகத்தர்களின் மின்னஞ்சல் கணக்குகள் ஏற்கனவே முடிவு செய்யப்பட்டுள்ளன. தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

மின்னஞ்சல் முகவரிகள், குறிப்பாக தகவல்தொடர்பு ஊழியர்களுக்காக, இயற்பியல் ஊடகங்கள் மூலம் செயல்திறன், நேரம்-விரிவாக்கம், பண பகிர்வு, முதலியன இல்லாமல் துல்லியம் மற்றும் செயல்திறன் ஆகியவற்றுடன் தொடர்புகொள்ள மற்றும் ஒருங்கிணைக்க பயன்படுத்தப்படலாம்.

முக்கியமாக, மென்பொருள் புதுப்பிப்புகள், ஊழியர்கள் அதிகாரிகளின் விழிப்புணர்வு, மற்றும் தலைமை அலுவலகத்தின் சிறப்பு அவசர தகவல் அறிவிப்புகள் ஆகியவை மின்னணு அஞ்சல் அலுவலரின் கணக்குகளால் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போது, அனைத்து ஊழியர் அலுவலரின் கணக்குகளும் முடிக்கப்பட்டுள்ளன.

**3. திணைக்களத்தின் இணையமூல சேவையைத் செயற்படுத்தல்**

நெட்வொர்க்கிங் தொழில்நுட்ப திட்டத்திற்கான மூன்று முக்கிய அமைப்புகள். தலைமை அலுவலகங்கள் மற்றும் துறைகளை இணைத்தல், தேசிய மட்டத்தில் நெட்வொர்க்கிங், மற்றும் அறிவியல் தரவுகளை கையாளுதல் மற்றும் அறிக்கையிடல்.

நெட்வொர்க்கிங் விளைவாக, தற்காலிக பதிவு மற்றும் இயங்குதள உரிமங்களை ஆன்லைன் ஊடாக வெளியிடலாம். தற்போது, பத்திரிகை நடிப்பில் 20 க்கும் மேற்பட்ட கடமைகள் உள்ளன. தற்போது, தகவல் ஊடகத்தின் ஊடாக அனைத்து மீனவர் பொருட்களின் மற்றும் விஞ்ஞான தரவியலாளர்கள் தகவல் ஊடகம் மூலம்

பெறப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தரவின் தரவு NARA மற்றும் புள்ளிவிபரப் பிரிவுக்கு வழங்கப்படும். திணைக்களத்தின் அனைத்து அஞ்சல் பரிவர்த்தனைகளும் நெட்வொர்க் செய்யப்படும். தொடர்ச்சியான உத்தியோகபூர்வ கண்காணிப்பு அமைப்புக்கான அடிப்படையாக இது இருக்கும்

நெட்வொர்க்கிங் நடவடிக்கைகள், மென்பொருள் மேம்படுத்தல்கள், வலைத்தளத்தின் நவீனமயமாக்கல், வலைப்பின்னல் மற்றும் வலை சேவையகங்களை நிறுவுதல், கள அலுவலர்களுக்கான தாவல்களை வழங்குதல், புலத்திற்குத் தேவையான உபகரணங்களை வழங்குதல். 2019 பிப்ரவரியில் மென்பொருள் தயாரிக்கப்படும். 2019 மார்ச்சில், பைலட் திட்டம் முயற்சி செய்யப்படலாம்.

தற்போதுள்ள வளர்ச்சிக்கு கீழ் உள்ள உயர்ந்த SEAS 'யூனிட் கட்டிடம் ஒவ்வொன்றிலும் தகவல் மற்றும் பயிற்சி பிரிவை நிறுவுதல். கடற்றொழில் சட்டத்தின் மாற்றங்கள் / ஒழுங்குவிதிகள் மீதான மாற்றங்கள் மாற்றங்கள், பயிற்சி உத்தியோகத்தர்கள் மற்றும் மீன்வளத் திணைக்களத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 4. உத்தியோகத்தர்களுக்கான தாவல்களின் விநியோகம்

முன்மொழியப்பட்ட நெட்வொர்க்கிங் செயல்படுத்த தொடர்பான அனைத்து துறையில் நடவடிக்கைகள். முன்மொழியப்பட்ட அலுவலர்களுக்கு நெட்வொர்க்கிங் திட்டம் Field Officers க்கு வழங்கப்பட்ட சிறப்பு மென்பொருளால் செய்யப்படுகிறது. பிரதான வேலைத்திட்டத்தின் மீது தினசரி வழக்கமான கடமைகளை கையாள அதிகாரிகள் அவற்றை கையாள அனுமதிக்கிறது. அதிகாரிகளுக்கு 284 தாவல்கள் விநியோகம் ஏற்கனவே முடிக்கப்பட்டுள்ளது.
கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு வழங்கப்படும் மென்பொருட்கள் பல தினசரி மீன்பிடிக் கப்பல்களின் ஊடாக துறைமுகத்தில் உள்ள கப்பல்களைப் பயன்படுத்துவதோடு துறைமுக கடமைகளை உறுதிப்படுத்துவதன் மூலமும் அவற்றை தலைமை அலுவலகத்தின் தகவல் தொழில்நுட்ப பிரிவுக்கு சமர்ப்பிக்கின்றன. அந்த நாளில். சிம் கார்டு மூலம் மீன், புகைப்படங்கள், இலக்கற்ற மீன்கள் மற்றும் தாவலை இயந்திரத்தின் மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றை பிடிக்க மீன் பிடிக்கப்படுகிறது.

## 5. உத்தியோகத்தர்களுக்கான அடிப்படை தகவல் தொழில்நுட்பப் பயிற்சி

2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் கடற்றொழில் மற்றும் நீரியல் வள திணைக்களத்திற்கான நெட்வொர்க்கிங் மென்பொருளின் அறிமுகத்தின் கீழ் அனைத்து பிரதேச உத்தியோகத்தர்களுக்கும் அடிப்படை பயிற்சி வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில், 237 உத்தியோகத்தர்கள் ஒவ்வொரு ஐ.டி. மாவட்ட அலுவலகம். அடிப்படை கணினி பயிற்சியானது 56 வானொலிகளுக்கும் மற்றும் அனைத்து மாவட்ட உதவி இயக்குனர்களுக்கும் வழங்கப்பட்டது. பயிற்சி முடிவில், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## 6. ஆவண மேலாண்மை அமைப்பு (DMS)

ஆவண மேலாண்மை மென்பொருள் (DMS), பப்ளிஷிங், ஸ்டோரேஜ், மாதிரியாக்கல் மற்றும் செயலாக்கத்திற்கான கணினி ஆதரவு அமைப்புகள். ஆவணம் மேலாண்மை மென்பொருள் (DMS) என்பது அவர்களின் மின்னணு ஆவணங்களை ஒழுங்கமைக்க, சேமிக்க, நிர்வகிக்க மற்றும் பின்பற்ற வழி.

இந்த சேவையகம், உள் சேவையகங்களில் பெரிய அலைவரிசை இயக்கத்துடன், தரவு சேவையகத்தை சார்ந்துள்ளது. மென்பொருள் சேமிப்பக இடைவெளி, பாதுகாப்பு, ஒழுங்குமுறை இணக்கம், மேம்பட்ட வசதி, குறைக்கப்பட்ட உடல் இடம் மற்றும் டிஜிட்டல் சேமிப்பு ஆகியவற்றைக் குறைக்கிறது

நவம்பர் தொடக்கத்தில் நவம்பர் தொடக்கத்தில், ஆரம்ப கட்டத்தின் கீழ் நவம்பர் தொடக்கத்தில் மென்பொருள் டி.எம்.எஸ். தலைமை அலுவலகத்தின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு ஊழியர் உறுப்பினரும், மூன்று அதிகாரிகளும் இந்த பயிற்சியில் பங்கேற்றனர்.

## 7. தரவுத்தளத்தினை தலைமை அலுவலகத்தில் பேணல்

தற்போது, தலைமை அலுவலக அதிகாரிகள் இணையத்தின் நெட்வொர்க் கட்டமைப்பை 2 Mbps க்கு 4 Mbps ஆக இரட்டிப்பாக்கினர். பிணைய இணைப்பு ஃபைபர் பயன்முறையில் உள்ளது. அதிகாரிகள் இப்போது இணையத்தை எளிதாக அணுகலாம்.

கூடுதலாக, அனைத்து நீர்வழிகளுக்கும் WiFiவழங்கப்படுகிறது, இது முக்கிய நீர் மற்றும் LGN வைஃபை அரசாங்க அரசாங்க நெட்வொர்க்குக்கு அணுகும். அரசாங்க தகவல் வலைப்பின்னலைப் பதிவுசெய்வதன் மூலம் திணைக்களத்திற்கு வரும் அனைத்து நபர்களுக்கும் இது சாத்தியமாகும்

## 8.திணைக்களத்தின் சேர்வர் முறைமை கொள்முதல் மற்றும் பராமரிப்பு செய்தல்

சேர்வர் வலையமைப்புக்கள் மற்றும் மென்பொருளுக்கான சேவையக வலையமைப்பின் நிறுவலின் ஆரம்ப நிலை இப்போது முடிந்துவிட்டது. அதன்படி,

1. மேம்படுத்தவும்
2. தொலைபேசி வலையமைப்பை இயக்குவதற்கான பவர் சேவர்
3. மீள் பதிவேற்றலுக்கான சேவர்

எட்டு உறுப்பினர் கொண்ட வலையமைப்பு தலைமை அலுவலகத்தில் அமைக்கப்படவுள்ளது.

## 9. இணையப் பதிவு முறைமை

மீனவர் நேரத்தையும் பணத்தையும் காப்பாற்ற நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் மூலம் மேன்முறையீட்டு முகாமைத்துவ நடைமுறைகளை செயற்படுத்துவதன் மூலம் வருவாயை அபிவிருத்தி செய்வதற்கு திணைக்களத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது. மீன்வள தரவுத்தள முகாமைத்துவத்திற்கான மின்னணு பைலட் சிஸ்டம் இப்பகுதியில் சமீபத்தியது

இந்த வழிமுறை திணைக்களத்தால் ஈர்க்கப்பட்டு, ஐரோப்பிய ஒன்றியத்தால் செயல்படுத்தப்பட்ட சாலை வரைபடத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஐரோப்பிய ஆணையம் தற்போதைய தரவு மேலாண்மை அமைப்பில் உள்ள குறைபாடுகளை குறைக்க முன்மொழியப்பட்ட முறையை பாராட்டியுள்ளதுடன் மீன்பிடி மீதான தடையை நீக்குவதில் ஒரு நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தியப் பெருங்கடல் டுனா கமிஷன் இந்த முறையானது இப்போது உலகத்தை உபயோகிக்க ஒரு எளிமையான மின்னணு முறை என்று சுட்டிக்காட்டியுள்ளதுடன், இப்பகுதியில் உள்ள மற்ற நாடுகளுக்கு அறிமுகப்படுத்த கோரியுள்ளது.

இந்த மென்பொருளானது கொழும்பின் பல்கலைக்கழகம் மற்றும் மீன்வளத் திணைக்களத்தின் கூட்டுத்தொகையாக அபிவிருத்தி செய்யப்பட்டதுடன், இறுதித் திட்டமானது ஒரு வருடத்திற்கு ஒரு தடவை அறிமுகப்படுத்தப்பட்டது

2110 மீன்பிடி படகுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அமைப்புக்கு கணினியை அடையாளம் காணவும் மேம்படுத்தவும் கொழும்பு பல்கலைக்கழகம் மென்பொருள் அபிவிருத்தி பெற்றுக் கொண்டது. அதன்படி, இந்த முறை மொபைல் போன்களில் இயங்கும். மேம்படுத்தப்பட்ட அமைப்பு 2019 ஜனவரியில் இயக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

செயலாக்க இப்போது ஸ்மார்ட் போன்களுடன் மட்டுமே சாத்தியமாகும். அதன்படி, எதிர்காலத்தில் ஒரு ஸ்மார்ட்போனுடன் எந்த மீனவரும் இந்த கணினியில் சேரலாம்

ஐரோப்பிய மீன்வளர்ப்பு தடை மீதான நீக்கப்பட்ட நோக்கத்திற்காக ஐரோப்பிய மீன்வள பதிவேட்டில் இருந்து IOTC தரவு ரெக்கார்டர் அகற்றப்பட்டதை கவனிக்க வேண்டியது அவசியம். இந்த தாவல்களின் மின்னணுப் பதிவு மென்பொருளிலும் மீன்பிடித் தடங்களினூடாக கப்பல்களின் புறப்பாடு மற்றும் வருகை ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கு மின்னணு தத்தல் பொறிமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது

## 10. க்ரூவை அடிப்படையாகக் கொண்ட பார்வையாளர்

தற்போது, விஞ்ஞானக் கப்பல் கண்காணிப்பாளர்கள் சிறிய அளவிலான படகு கண்காணிப்புகளைப் பயன்படுத்துவதற்கான சிரமங்களை எதிர்கொள்ளும் வகையில்

தரவுகளைப் பெறுவதற்கு முன்மொழியப்பட்டிருக்கின்றனர். ஒரு மீனவர் படகில் ஒரு பார்வையாளராகப் பயன்படுத்துகிறார், மேலும் அனைத்து பிடிக்கக்கூடிய பிடியையும் அனுபவிக்க அனுமதிக்கிறார். இந்த அமைப்பின் நோக்கம் இந்த ஆடியோ மென்பொருள் பயன்படுத்தி மக்கள் தொகை நிலைமையை ஆய்வு மற்றும் அறிவியல் தரவு பதிவு செய்ய உள்ளது. இது மற்ற வகைகளை விட தரவைத் தனிப்பயனாக்குவதற்கு உங்களை அனுமதிக்கிறது.

